கனி 11
2024 நவம்பர்

# புதிய தேடல்

புதிய பாதையில் விடியலாய் குழித்துறை மறைமாவட்டம்



## புனிதர்களின் பாதையில்...

ஆண்டு சந்தா : 130 தனிப்பிரதி : 10

Proprietor :
**S. Arul Raj**

Cell :
**9443451139**

ANNA
CONSTRUCTIONS

# ANNA CONSTRUCTIONS

**No.5 / 16 Kanjiramkattuvilai,**
**Mullanginavilai P.O.,**
**Kanyakumari Dist.- 629 157,**
**Tamilnadu.**



*We undertake all types of Construction works*

## புதிய தேடல்

*இது ஒரு குழித்துறை மறைமாவட்ட வெளியீடு*

*ஆசிரியர்*

அருள்பணி. முனைவர். **இரா.பால் ரிச்சார்டு ஜோசப்**

*ஆசிரியர் குழு*

அருள்பணி. **ஜா. ஜாண் ஜிஜோ** (துணைத்தலைவர்)

அருள்பணி. **பெ. வெலிங்டன்** (செயலர்)

திரு. **மு. அருளப்பன்** (துணைச் செயலர்)

அருள்பணி. **பி. ஜோஸ் பிரசாந்த்** (பொருளர்)

அருள்பணி. **ஜாக்சன்**

**குமரி ஆதவன்**

திரு. **ஜெயசிங் ராபின்சன்** (வழக்கறிஞர்)

அருள்பணி. முனைவர். **எ. ஒய்சிலின் சேவியர்**

அருள்பணி. **க. சுனில்**

திரு. **ஞா. எலியாசு**

திருமதி. **டி. மேரி விஜிலா**

*தொடர்பு முகவரி*

**புதிய தேடல்**

**ஆயர் இல்லம், உண்ணாமலைக்கடை**

**மார்த்தாண்டம், அஞ்சல் பெட்டி எண்:1**

**அஞ்சல் எண் - 629 179**

**கைபேசி : 9443693505, 8525032383**

**மின் அஞ்சல்:**

**newputhiathedal@gmail.com**

**தனிப்பிரதி : ₹ 10**

**ஆண்டு சந்தா : ₹ 130**

**ஆயுள் சந்தா : ₹ 2000**

விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| **பலவண்ண அட்டை வெளிப்பக்கம்** | ₹ 12000 |
| **பலவண்ண அட்டை உள்பக்கம்** | ₹ 7000 |
| **முழுப்பக்கம் கறுப்பு** | ₹ 2000 |
| **அரைப்பக்கம் கறுப்பு** | ₹ 1000 |




# ஆசிரியரின் அன்பு வரிகள்

அருள்முனைவர். **இரா. பால் ரிச்சார்டு ஜோசப்**

**புதிய தேடலின் உடன் பயணிக்கும் அன்பான வாசகர்களே அன்பின் நல்வாழ்த்துகள்.**

மனித வாழ்வு என்பது ஒரு பயணம். இப்பயணத்திற்கு பல பாதைகள் உண்டு. எல்லோரும் பயணம் செய்யாத பாதைகளை வெகு சிலரே தேர்வு செய்வர். இப்பாதை கடினம் ஆனது. இப்பாதையில் நடப்போர் புனிதர்களாகவும், சான்றோர்களாகவும், இலட்சியவாதிகளாகவும் திகழ்கின்றனர். இவர்களை வரலாறு நினைக்க மறப்பதில்லை.

நம்முடைய சுமைகளை சுமப்பவர்களால் இவ்வுலகில் சுகம் பிறக்கின்றது. பிறர் மீது சுமை சுமத்துபவர்களால் இவ்வுலகில் சோகம் பிறக்கின்றது. பிறரது சுமைகளை சுமந்து சுகத்தை இவ்வுலகில் வாழ்விக்க தங்களை அர்ப்பணித்தவர்களே புனிதர்கள், சான்றோர்கள், தியாகிகள்.

அன்புடன் தம் குழந்தைகளை வளர்த்து ஆளாக்குபவர்கள், குடும்பம் முன்னேற அயராது உழைப்பவர்கள். மூத்தோரையும் நோயுற்றோரையும் புன்னகையுடன் பராமரிப்பவர்கள் தீவிரத் திருஅவையின் இன்றைய புனிதர்கள் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

1956 நவம்பர் ஒன்றாம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் பிறப்பதற்கு முன்பு குமரி நிலப்பகுதி திருவிதாங்கூர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. இந்த நிலப்பகுதியில் வாழ்ந்த உயர் சாதியினர் தவிர மற்ற சாதியினர் அனைவரும் பல்வேறு வகையான வரிகொடுமைகளுக்கு ஆளாகி இருந்தார்கள். விளைவித்த பயிர்களில் பெரும்பகுதியை மேல் சாதியினர் பறித்து கொள்வர். இவற்றை உற்று கவனித்த சுவாமி விவேகானந்தர் திருவிதாங்கூர் பைத்தியக்காரர்களின் கூடாரம் என்றார். இந்த பெரும் கொடுமைகளை எதிர்த்துப் போராடி பெற்ற விடுதலையின் நாள்தான் நவம்பர் ஒன்று.

குமரி மக்கள் இரண்டு விடுதலைப் போராட்டத்தை கண்டவர்கள். அதிலும் சமூக விடுதலைக்கும், சமய விடுதலைக்கும் போராடி வெற்றி கண்ட மண்ணின் மக்கள் நாம். நம் முன்னோர் இதற்காக சிந்திய இரத்த சாட்சியமும், உயிர் தியாகமும் புதிய தலைமுறைக்கு சொல்லியாக வேண்டும் என்ற முனைப்பில் தான் இம்மாத இதழ் "**புனித பாதையில்**" என்ற சிந்தனையோடு மலர்கின்றது. சமூக தளத்திலும், சமயத்திலும் சிந்திய ரத்தத்துளிகள் நாளைய சமூகத்தை நலம் மிக்கதாக மாற்றட்டும். நம் முன்னோர் நடந்த புனிதப் பாதையில் நாமும் பின் தொடர்ந்து நடப்போம்.

கனி 11 அகல் 15 நவம்பர் 2024



# ஆயரின் அமுத மொழிகள்

**விடியல் தேடி, புனிதப்பாதையில் புது உலகம் படைக்க புதிய தேடல் வாசகர்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!**

இந்த மண் மனிதர்களால் புனிதம் அடைந்திருக்கிறது. புனிதர்களால் புதுமையும் அடைந்திருக்கிறது. நேற்றைய மனிதர்களின் தியாகத்தில் தான் இன்றைய நாள் இனிய நாளாகிறது. இன்றைய நமது வாழ்வும், தியாகமும் தான் நாளையை ஆனந்த நந்தவனமாக்கும். ஆகவே, நாளைய தலைமுறைக்கு நல்லதைச் சொல்லவும், நமது வாழ்வு மூலம் நல்ல படிப்பினைகளை விதைக்கவும் நாம் தயாராக வேண்டும்.

இந்த மண்ணை நேசித்த நேற்றைய மனிதர்கள் கற்பனைக்கு எட்டாத ஒரு சொர்க்கத்தை மண்ணில் உருவாக்க முனைந்தார்கள். அதற்காகவே தம்மை தியாகம் செய்தார்கள். இந்த நாட்டின் சுதந்திர போராட்டமும், நாம் வாழும் இந்தக் குமரி மண்ணில் நடந்த மொழி மற்றும் சமூக விடுதலைப் போராட்டமும் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் “கிறிஸ்துவின் ஒளியைப் பெற்றுக் கொள்வது மட்டும் போதாது. நாமே ஒளிச் சுடராகத் துலங்க வேண்டும். அணையாது ஒளிரும் கிறிஸ்துவின் தீபங்களாக இவ்வுலகில் இருள் அகற்றுவதே நம் கடமை” என்கிறார்.

அதுபோல் ஆன்மிக பாதையில் தம் வாழ்நாளை இம்மண்ணில் செலவழித்து, இறை மகன் இயேசுவின் வாழ்வியல் சுவடுகளை விதைத்தார் புனித சவேரியார். இயேசுவின்பால் ஈடுபாடும், பக்தியும் கொண்டு தான் பெற்ற மீட்பை இம்மண்ணில் பிறருக்கும் கொடுக்க தன்னை அர்ப்பணித்தார். தன் உயிரையும் தியாகம் செய்தார்.

காலச்சூழல்கள் தான் ஒவ்வொரு மனிதனையும் இயக்கிக் கொண்டிருக்கின்றன. அதேபோல் அன்றைய காலச்சூழல் தேவசகாயத்தையும் கிறிஸ்துவுக்கான போராளியாகவும், நம்முடைய புனிதராகவும் மாற்றியது. நம் வாழ்க்கை சூழலில் புனித பாதை எதுவென்று தன் நம்பிக்கை வாழ்வாலும், மறைசாட்சியத்தாலும் தெளிவையும் வழிகாட்டுதலையும் தந்துள்ளார். காலத்தின் அறிகுறி தெரிந்து, புனித பாதை எதுவென்று தெளிவு பெறுவோம்; அந்தப் பாதையில் நம்பிக்கையோடும் வீரத்தோடும் உறுதியோடும் பயணிப்போம்!

கிறிஸ்துவில் உங்கள் அன்புள்ள,

+ A. Albert

மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ்,
குழித்துறை மறைமாவட்ட ஆயர்.

| எண் | படைப்பு |
| --- | --- |
| 1. | ஆசிரியரின் அன்பு வரிகள் |
| 2. | ஆயரின் அமுத மொழிகள் |
| 3. | திருஅவை சட்டத்தில் கிறித்தவ நம்பிக்கையாளரின் கடமைகளும் உரிமைகளும் |
| 4. | புனித தேவசகாயம் வாழ்வியல் சூழல்கள் |
| 5. | சிறியன சிறப்புடன் செய்தவர்கள் |
| 6. | வாழிய குமரி வாழியவே |
| 7. | திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையும் பாதையும் |
| 8. | நமது மண்ணின் புனிதர்கள் |
| 9. | புனிதமும் விடுதலை வாழ்வும் |
| 10. | இளையோர் எதிர்நோக்க வேண்டிய போதையில்லாத பாதை! |
| 11. | தேன்சீட்டுப் பதில்கள் |
| 12. | சீடத்துவ வாழ்க்கை |
| 13. | குருதியில் பூத்த வரலாற்று வசந்தம் குமரிமண் |
| 14. | திருமண முறியல் தடையாக இருப்பது தாம்பத்திய உறவு கொள்ளும் ஆற்றலின்மை |
| 15. | திருவிவிலியம் கூறும் தூய்மை |
| 16. | இயற்கைக் காட்டும் வழியில் தைராய்டை பேணுவோம் |
| 17. | குமரி மாவட்டத்தின் இன்றைய தேவை |
| 18. | இணைந்து மகிழ்ந்து கொண்டாடத் திருப்பலி |
| 19. | வெற்றிக்கான ஐந்து படிகள் |
| 20. | பணிக்குழுக்களின் அறிக்கைகள் |



# திருஅவை சட்டத்தில் கிறிஸ்தவ நம்பிக்கையாளரின் கடமைகளும் உரிமைகளும்

பேரருட்பணி. முனைவர். **சேவியர் பெனடிக்ட்** DCL
(மறைமாவட்ட முதன்மைப் பணியாளர், குழித்துறை மறைமாவட்டம்)

திருஅவைச் சட்டம் எண் 209 நம்பிக்கையாளர்கள் வாழ்வாக்க வேண்டிய இரண்டு கடமைகளை வலியுறுத்துகின்றது.

1. திருஅவையோடு உள்ள உறவு ஒன்றிப்பை பேணிக் காக்கும் கடமை.
2. அனைத்துலக திருஅவைக்கும், தலத்திரு அவைக்கும் ஆற்ற வேண்டிய கடமை.

**திருஅவையுடன் உறவு ஒன்றிப்பு**

ஒரு நம்பிக்கையாளர் திருஅவையோடு கொண்டுள்ள உறவை அக உறவு, புற உறவு என இரண்டு விதமாகப் பார்க்கலாம். அக உறவு என்பது ஒரு நம்பிக்கையாளர் இறைவனின் அழைப்பிற்கு செவிமடுத்து, அவர் திருவுளத்திற்கேற்ப சான்று வாழ்வு வாழ்வதன் வழியாக இறைவனோடு கொள்ளும் உறவு. புற உறவு என்பது திருமுழுக்கின் வழியாக நம்பிக்கையாளர் சமூகத்துடன் (பங்கு சமூகத்துடன்) இணைந்து திருஅவையின் ஆசிரியம் சுட்டிக்காட்டும் கடமைகளை நிறைவேற்றுவதாகும். திருஅவையுடன் முழுமையான உறவு ஒன்றிப்பில் உள்ள ஒரு நம்பிக்கையாளர் மூன்று வழிகளில் புற உறவை வெளிப்படுத்துகின்றார். (தி. ச. 205)

1. திருஅவையின் நம்பிக்கை அறிக்கையை ஏற்று அறிக்கையிடுவதன் வழியாக
2. அருளடையாளங்களை பெறுவதன் வழியாக
3. திருஅவையின் ஆளுகைக்கு கட்டுப்பட்டு செயல்படுவதன் வழியாக

**நம்பிக்கை அறிக்கை**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும் நாம் நம்பிக்கை அறிக்கையைப் பாடுகின்றோம். அதில் கூறப்பட்டுள்ள மறையுண்மைகளை ஏற்றுக்கொள்வதன் வழியாக திருஅவையுடன் உள்ள உறவு ஒன்றிப்பை வெளிப்படுத்துகின்றோம். இந்த மறையுண்மைகளை ஏற்றுக்கொள்ளாமல் முழுமையாக, வெளிப்படையாக புறக்கணிக்கின்றவர்கள் நம்பிக்கை மறுதலிப்பு (Apostasy) என்னும் குற்றத்தை புரிகின்றனர்.

நம்பிக்கை அறிக்கையில் சேர்க்கப்படாத மேலும் பல மறையுண்மைகளை திருஅவையின் ஆசிரியம் நமக்கு கற்பிக்கின்றது. உதாரணமாக "நற்கருணையில் கிறிஸ்துவின் பிரசன்னம், அன்னை மரியாள் இறைவனின் தாய்" போன்றவை. இவற்றில் எவையேனும் ஒன்றை பிடிவாதமாக வெளிப்படையாக மறுப்பவர்கள் திரிபுக்கொள்கையாளராக (Heretic) தன்னை திருஅவையின் உறவு ஒன்றிப்பிலிருந்து அன்னியப்படுத்துகின்றார் (தி.ச. 751).

**அருளடையாளங்களை பெறுவது**

திருஅவையில் ஏழு அருளடையாளங்கள் உள்ளன. அருளடையாளங்களை பெறுவதன் வழியாக ஒரு நம்பிக்கையாளர் உயரிய அளவில் திருஅவையோடு உள்ள உறவு ஒன்றிப்பை வெளிப்படுத்துகின்றார் (தி.ச. 840). ஒருவர் முழுமையாகத் தன்னை திருஅவையோடு இணைத்துக்கொள்ள திருமுழுக்கு, உறுதிப்பூசுதல், நற்கருணை ஆகிய அருளடையாளங்களை கண்டிப்பாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். (தி.ச. 842 தி2). திருஅவையின் ஆளுகைக்கு கட்டுப்படுவது திருமுழுக்கு பெற்ற அனைவரும் உரோமை தலைமைகுருவிற்கும் (திருத்தந்தை) தலத்திருஅவை ஆயர்களுக்கும் கீழ்படிய வேண்டும். திருத்தந்தையின்கீழ் உறவு ஒன்றிப்பின் அடையாளமாக செயல்படும் திருச்சபையின் உறுப்பினர்களது ஒன்றிப்பிலிருந்து விலகுவது சமயப் பிளவு (Schismatic) எனப்படும் குற்றத்தைப் புரிவதாகும். உதாரணமாக திருத்தந்தையால் அங்கீகரிக்கப்பட்ட ஆயர் குழாம் அல்லது ஆயர் பேரவையின் அதிகாரப்பூர்வமானப் போதனைகளைப் பணிவோடு கடைபிடிக்க நம்பிக்கையாளர்கள் கடமைப்பட்டுள்ளனர். (தி.ச. 751-753).

திருஅவைச் சட்டபடி விசுவாசத்தை மறுதலிப்பவர்களும், திரிபுக்கொள்கையாளர்களும், சமயப்பிளவு செய்பவர்களும், உறவு ஒன்றிப்பிலிருந்து நீக்கம் என்ற தண்டனையைப் பெறுவர் (தி.ச. 1364).

**அனைத்துலக திருஅவைக்கும், தலத்திரு அவைக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள்**

ஒவ்வொரு நம்பிக்கையாளர்களுக்கும் தான் உறுப்பினராக இணைந்துள்ள பங்கிற்கும், மறைமாவட்டத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன. உதாரணமாக பங்கேற்பு அமைப்புகளில் ஈடுபட்டு செயல்படுவது, அருள் வாழ்வை வளப்படுத்த உதவுவது, தேவையில் இருப்போருக்கு உதவ பொருளுதவி செய்தல் போன்றவற்றை கூறலாம். அகில உலகத் திருஅவை நம் உதவியை நாடும்போது உதவி செய்ய கடமைப்பட்டுள்ளோம். மறைபரப்பிற்காக உதவுகின்றவர்கள், அருட்பணியாளர்களின் உருவாக்கத்தில் பங்கேற்கின்றவர்கள், எங்கோ நடைபெற்ற ஒரு துயர்துடைக்க உதவிக்கரம் நீட்டுதல், இவற்றின் வழியாக அகில உலகத் திருஅவை சார்ந்த கடமைகளையும் நாம் நிறைவேற்றுகின்றோம்.

### சிந்தனை துளிகள்

**களத்தில் இறங்கி பணியாற்றுவர்கள் மக்களை எளிதில் புரிந்துகொள்ள முடியும். அருகில் இருப்பவர்களின் ஆலோசனைகளயும், ஒற்றர்களின் தகவல்களையும் மட்டுமே நம்பி முடிவுகள் எடுப்பவர்கள் காகிதப் புலிகளாகவே இருப்பார்கள்.**

---

**புதிய பாதையை படைக்கும் போது**
**காலில் முள் குத்துமே என்று**
**கவலைப்படுபவர்கள்**
**காணாமல் போகிறார்கள்**
**கணுக்கால் வரை தேய்ந்து போனாலும்**
**கவலைப்படாமல் அர்ப்பணிப்பவர்களே**
**உலகில் சுழற்சியை**
**மாற்றிக்காட்டுகிறார்கள்.**



## புனித தேவசாகயம் வாழ்வியல் சூழல்கள்

**ஓலக்கோடு ஜாண்**

**“ முத்தீன்ற சிப்பியெல்லாம் ஒளிர்வதில்லை.**
**மூழ்கியவர் எடுத்தவைதாம் ஒளிரக்காண்போம்.**
**திருமறையை பரப்புகின்ற தொண்டராக**
**திண்ணமாய் வாழ்ந்திடவே ஆவல்கொண்டார்**
**புடம் போட்ட தங்கமாய் திருமுழுக்குப்பெற்றார்.**
**புல்லர்களால் கொலை பலியாய் ஆக்கப்பட்டார்.”**

ஆம்! நம் தமிழ்மண் ஈன்ற முதல் புனிதர். இந்தியாவின் பொதுநிலையினர் புனிதர் என்று போற்றப்படும் நம் மண் ஈன்ற மாணிக்கம் புனித தேவசகாயத்தின் கால்பட்ட இடமெல்லாம் கிறிஸ்தவம் தழைத் தோங்கியுள்ளது. கோடி அற்புதர் என புனித அந்தோணியாரைக் கொண்டாடுகின்றோம். ஆனால் கோடானுகோடி அற்புதர் என நம்மவரைச் சொல்லலாம், காரணம் இவரது பரிந்து பேசுதலால் ஏராளமான அற்புதங்கள் நிரம்பி வழிகின்றன. ஆனால் முறையாக அவை ஆவணப்படுத்தப்படாமல் இருப்பதால் அவை மக்களிடம் முழுமையாக சென்று சேரவில்லை என்பது கசப்பான உண்மை.

மனமாற்றம் என்பது வெறுமனே ஒரு சமய பெயர்ச்சி அல்ல. நம் புனிதரைப் பொறுத்தவரையில் அவரே விரும்பி ஏற்றுக்கொண்ட பொற்சிலுவை, கல்வாரி மலையிலே ஆண்டவர் இயேசு அனுபவித்த பாடுகளை அன்றைய திருவிதாங்கூர் மண்ணிலே மூன்று ஆண்டுகள் அனுபவித்துக்காட்டியவர். தியாகம் என்னும் செக்கிலே தன்னை ஓர் மாடாக இணைத்துக் கொண்டு தூய்மையான விதையை ஆட்டி எடுத்த எண்ணெய் தான் அவரது விசுவாச வாழ்வு. “உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்” (மாற்கு 16:15) என்ற ஆண்டவர் இயேசுவின் கட்டளையை ஏற்று, “யான் பெற்ற இன்பம் பெறுக” இவ்வையகம் என்ற தூய எண்ணத்தோடு தான் வாழ்ந்த மண்ணை தன் செங்குருதியால் குளிர்வித்த தியாகச் செம்மல் புனித தேவசகாயம்.

**சாதிய படிநிலை**

நம் புனிதர் வாழ்ந்த காலக்கட்டம் பெரும் வித்தியாசமானது. பிரம்மாவின் தலையிலிருந்து பிறந்தவர்கள் பிராமணர்கள். கழுத்திலிருந்து பிறந்தவர்கள் சத்திரியர்கள். வயிற்றிலிருந்து பிறந்தவர்கள் வைசியர்கள். காலிலிருந்து பிறந்தவர்கள் சூத்திரர்கள், மற்றவர்கள் பஞ்சமர்கள் என்ற மறு தர்ம சாஸ்திர நீதியிலான வாழ்க்கை முறை இருந்தது. பிரம்மாவினால் பூஜிப்பதற்காக படைக்கப்பட்டவர்கள் பிராமணர்கள். சாதிக்கொடுமை மிக உச்சக்கட்டத்திலிருந்த காலக்கட்டம். உயர்குலத்தவர்கள் தாழ்ந்த சமூக பஞ்சமர்களைக் கண்ணால் கண்டாலே அது தீட்டு என சாதிய வெறியின் உச்சத்திலிருந்தக் காலக்கட்டத்தில் அதை தூக்கி தூர எறிந்து விட்டு இறைவன் படைப்பின் முன் மனிதர் அனைவரும் சமம் என்று ஓங்கி உரைத்தார். இதனால் அன்று ஈனர், சண்டாளர் என ஆட்சியாளர்களால் புறக்கணிக்கப்பட்ட ஏழை, எளிய, பின்தங்கிய மக்களோடு உண்டார், குடித்தார், உறவாடினார்.

சாதியம் என்பது ஒரு தீயச்செயல். கிறிஸ்தவ மாண்புக்கு எதிரானது என மக்களின் மனங்களில் பதியச்செய்தார். அதற்கு தனக்குத் தானே முன் மாதிரியாக விளங்கினார். நாராயணகுரு, ஐயங்காளி, ஐயா வைகுண்டர் என மாற்று மத சிந்தனையாளர்களுக்கு முன்னோடியாக விளங்கியவர் நம் புனிதர். ஆனால் அவரது சாதிய எதிர்ப்பு மக்கள் மத்தியில் ஆழமாக பதிவுச் செய்யப்படாமல் இருப்பது வேதனைக்குரியது.

இதில் கவனத்தில் கொள்ள வேண்டிய சிந்தனைக்குரிய செய்தி என்னவென்றால் நீண்ட பெரும் பாரம்பரிய மிக்க சிறியன் கிறிஸ்தவம் இந்த மண்ணில் இருக்கத்தான் செய்தது. இதில் உயர் சாதியினருக்கு மட்டுமே உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. லத்தீன் கிறிஸ்தவத்தில் சாதி ரீதியாக தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் மட்டுமே இணைந்திருந்தனர். இந்தியாவிற்கு வந்த போர்ச்சுக்கீசியர்கள் லத்தீன் கிறிஸ்தவத்திலேயே பணி செய்தனர். அதிலும் இயேசு சபையினரின் பங்கு அளவிடக்கரியது. இதனால் சிறியன் கிறிஸ்தவர்களுக்கும் போர்ச்சுக்கீசியர்களுக்குமிடையே தீரா பகை இருந்து வந்தது. சிறியன் கிறிஸ்தவர்கள் திருத்தந்தையின் கீழ் இணைவதற்கு போர்ச்சுக்கீசியர்களும், லத்தீன் கிறிஸ்தவர்களும் தடையாக இருந்தனர். நம் புனிதர் சிறியன் கிறிஸ்தவத்தில் இணைந்திருந்தால் அவரது தலைக்கு வெட்டு வந்திருக்காது.

ஆனால் இறைவன் படைப்பின் முன் மனிதர் அனைவரும் சமம் என்று ஓங்கி உரைத்த லத்தீன் கிறிஸ்தவத்தில் அதுவும் ஈனர்கள், சண்டாளர்கள் என புறக்கணிக்கப்பட்ட பிற்பட்ட மற்றும் பின் தங்கிய மக்கள் இணைந்திருந்த கீழ்சாதியினரின் லத்தீன் கிறிஸ்தவத்தில் இணைந்ததால் மட்டுமே சாதிய கவுரவத்தோடு ஏற்றுக்கொண்டார். இதற்காக பல்வேறு விதமான தியாகத் தழும்புகளை ஏற்க வேண்டியதாயிற்று.

முதலில் அவரது மனைவி பார்க்கவி பின்னர் ஞானப்பூ என்றப் பெயரில் திருமுழுக்குப் பெற்று இறைபணியாற்றினார். அடுத்ததாக அவரது மாமியார் அனந்தேஸ்வரி, மாமனார், மைத்துனர்கள், தாய்வழி உறவினர்கள், தந்தை வழி உறவினர்கள் என குடும்பத்தினர், நண்பர்கள், நாயர் என தன்னை நேசித்த உயர்குலத்தினர் அனைவரின் ஏளனப் பேச்சுக்கும் , வெறுப்புக்கும் உள்ளானார். ஆனால் அவை அத்தனையும் துச்சமென தூக்கி எறிந்து இறை இயேசுவின் அருந்துணைக்கு உள்ளானார். அவரது தியாக வாழ்வுக்கான வெளி அடையாளங்கள் இவை . அத்துடன் பெரும் செல்வச் செழிப்பானக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர் நம் புனிதர். நில புலன்கள் வேலையாட்கள் என சொகுசாக வாழ்ந்தவர். இறைவன் பார்வையில் இவை அனைத்துமே கால் தூசுக்கு சமம் என உணர்ந்தார். எனவே எந்த பொருளாசையும் இன்றி துறவி போல் வாழ்ந்துக்காட்டினார்.

அரண்மனையிலே கோட்டை கட்டும் அதிகாரியாக செயல்பட்டு வந்தவர் நம் புனிதர். தொழிலாளிகளுக்கு ஊதியம் கொடுக்கும் பொறுப்பு இவருக்குரியது. இவர் கைதுச் செய்யப்பட்ட உடன் தொழிலாளர்கள் கண்ணீருடன் கலங்கி நின்றனர். காரணம் உழைப்புக்கு நியாயமான ஊதியம் கொடுக்கும் வழக்கம் அன்று நடைமுறையில் இல்லை. ஆனால் நம் புனிதர் மனிதரை மனிதராய் நேசித்ததால் அல்லது தன் சகோதரர்களாய் ஏற்றுக் கொண்டதால் இனி யார் இவ்வாறு நியாயமானக் கூலி தருவார்கள் என ஏங்கித் தவித்தனர். குறிப்பாகச் சொல்வதாக இருந்தால் இவர் ஒரு சமூகப்போராளி, மனித நேய தியாகி , கிறிஸ்தவ மாண்பையே தனது வாழ்வாகக் கொண்ட புரட்சியாளர் என சொல்லலாம்.



# சிறியன சிறப்புடன் செய்தவர்கள்

அருள்பணி. **வெ. மரிய அல்போன்ஸ்**

**சிறப்புடன் ஆற்றும் சிறியவை!**

சர் வுட்டன்பரோ அவர்களின் புகழ்பெற்ற ‘‘காந்தி’’ திரைப்படத்தில் மறக்க இயலாத ஓர் அழகிய காட்சி. காங்கிரஸ் தலைவர்கள் ஒரு முக்கியமான கூட்டத்தில் அமர்ந்து விவாதம் செய்து கொண்டிருக்கின்றனர். ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா ஆசாத், முகமது அலி அஜின்னா போன்ற பெருந்தலைவர்கள் தங்களுக்குள் விவாதிக்கிறார்கள். அப்போது பூட்டி இருந்த அறைக்குள், ஏவலர் ஒருவர் தேநீர் குவளைகளைத் தட்டு ஒன்றில் ஏந்தி உள்ளே நுழைகிறார். இதைச் சற்றும் பொருட்படுத்தாமல் தலைவர்கள் தொடர்ந்து நிகழ்த்துகின்றனர் கருத்துப் பரிமாற்றம். ஆனால், காந்தி ஒருவர் மட்டும் கூட்டத்திலிருந்து எழுகிறார்; தட்டுடன் உள்ளே நுழையும் பணியாளரிடம் ஓடிச் செல்கிறார்; அவரிடமிருந்து தேநீர் தட்டைப் பெற்றுக் கொள்கிறார்; மற்ற தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரே தேநீர் பரிமாறுகிறார். CÕ ‘‘காந்தி’’ திரைப்படத்தில் வருகின்ற ஒரு சிறிய காட்சி. ஆனால், அதன் பொருளும் தாக்கமும் பெரிது. இது மற்ற தலைவர்களிடமிருந்து காந்தியை முற்றிலும் வேறுபடுத்திக் காட்டிய அரிய காட்சி அமைப்பு.

‘‘இதில் என்ன சிறப்பு உள்ளது?’’ என நமக்குள் எழும்பலாம் கேள்வி. ஏனைய தலைவர்கள் நாட்டின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் கருத்துக்களைக் காரசாரமாக பகிரும்வேளை, காந்தி மட்டும் ஏன் எழும்ப வேண்டும்? தேநீர் குவளைகளை ஏவலரிடமிருந்து ஏன் பெறவேண்டும்? மற்றவர்களுக்கும் அவரே எடுத்துச் செல்ல வேண்டிய தேவை என்ன?

தேவையே இல்லை! காந்தி அடிகள் எழும்பாமல் இருந்திருந்தாலும் யாரும் அதை குறையாக எடுத்துக் கொள்வதும் இல்லை. பின் ஏன் காந்தி இவ்வாறு நடந்து கொண்டார்? இதுதான் தொண்டுகள் ஆற்றும் தலைவருக்கான உயரிய பண்பு! தொண்டு ஏற்பதில் வெளிப்படுவதில்லைத் தலைமைப் பண்பு; தொண்டுகள் ஆற்றும் பண்பில்தான் பிரதிபலிக்கப்படுகிறது தலைவருக்கு உரிய உயர் நெறித் தகுதி. இதனுடைய பின்னோட்டம் இன்னும் தெளிவான பார்வையைப் பயிற்றுவிக்கிறது. தலைவனின் தகைமையை வெளிப்படுத்துவது பெருஞ்செயல்கள் அல்ல! அவை மிகவும் சாதாரணமான செயல்கள்! எவரும் கணக்கில் எடுத்துப் பார்க்காத சிறிய காரியங்கள்! இதைத்தான் உவப்புடன் நிறைவேற்றுகிறார் காந்தி. எனவேதான் அவர் மகா ஆத்துமாவாக உயர்ந்து நிற்கிறார்.

மாற்கு நற்செய்தி விவரித்து விளக்குகிறது: ‘‘நன்று. நம்பிக்கைக்கு உரிய நல்ல பணியாளரே, சிறிய பொறுப்புகளில் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்தீர்; எனவே, பெரிய பொறுப்புகளில் உம்மை அமர்த்துவேன்’’ (மத் 25:23).

சிறியவற்றைப் பொறுப்புடன் செய்கின்றவர்களே புனிதர்கள்!

**பெருஞ்செயல்கள் ஆற்றுதல் அல்ல!**

பெருஞ்செயல்களைத்தான் எதிர்பார்க்கிறது மனிதர் மனம்! வியப்பிற்கு உரியவையாகவும் அவற்றையே நாம் பார்க்கிறோம். எளிய செயல்கள் நம்மை வெகுவாக ஈர்ப்பதில்லை.

சிரியா மன்னனின் படைத் தலைவன் நாமானின் பார்வையும் இத்தகையதே! (2 அர 5:11-12). அவர் எதிர்பார்த்தது என்ன? பெருஞ்செயல்! இறைவாக்கினர் எலிசா, பெரிய நோய்க்கு சிறிய மருத்துவத்தைக் குறிப்பிடுகிறார். படைத் தளபதியால் இதை ஏற்க முடியவில்லை! எளிதான செயல் ஏற்புடையதாகப் பார்க்கப்படவில்லை. ஆனால், படைத் தலைவனின் பணியாளர்களின் பார்வை வேறு. அவர்கள் அதைக் குறிப்பிட்டுக் காட்டிய பின்னரே நம்புகிறது நாமானின் மனம்: ‘‘அரிதான ஒன்றை உமக்குக் கூறியிருந்தால், நீர் அதை செய்திருப்பீர் அல்லவா?’’ (2 அர 5:13).

### சிறிய காரியங்களில் நேர்த்தி

பெருஞ்செயல்கள் ஆற்றுவதில் இல்லை பெருமை! சிறிய காரியங்களை நேர்த்தியாகச் செய்வதுதான் புனிதம்! புனிதர் பலரது வாழ்விலும் இதையே நாம் காண்கிறோம். ''சாதாரண செயல்களைச் சிறப்புடன் நிறைவேற்றும் சீரிய மனமே அன்றாடப் புனிதத்தின் தனிப்பெரும் அடையாளம்!'' (திருத்தந்தை பிரான்சிஸ், திருத்தூது ஊக்கவுரை மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், எண்: 07). இத்தகைய புனிதர்கள் நமக்கு அருகிலேயே வாழ்கிறார்கள். ஆனால், அவர்களின் புனிதம் நம் பார்வைக்குப் படுவதில்லை. நாம் எதிர்பார்ப்பவை:

* ஆச்சரியப்படுத்தும் ஆளுமைகள்
* ஆரவாரம் நிறைந்த எழுச்சிக் கூட்டங்கள்
* உரத்தக் குரல் ஓலமிடும் இறை வேண்டல்கள்
* காதைப் பிளக்கும் பாடல்கள்
* அதட்டும் தொனியில் அதிகாரப் பேருரைகள் திருத்தந்தை முன்மொழியும் புனிதம் புதியது.
* தம் பிள்ளைகளை அன்பொழுக வளர்த்து ஆளாக்கும் பெற்றோர்
* தம் குடும்பத் தேவைகளுக்காக அயராது உழைக்கும் பெற்றோர்
* மூத்தோர், நோயுற்றோரைப் புன்னகை யுடன் பராமரிக்கும் நல்லுள்ளங்கள்

''இவர்கள்தான் தீவிரத் திருஅவையின் புனிதர்கள். நம் வீட்டுக் கதவின் அடுத்த வாயில் வாழும் தூயவர்கள். நம்மோடு, நமது மத்தியில் வாழும் இவர்களே இறைவனின் குறைவற்ற அன்பைப் பிரசன்னமாக்கும் தியாக தீபங்கள். இவர்களை நாம் புனிதத்தின் பெரும்பான்மை மக்கள் என்கிறோம்'' (மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள், எண்:08).

### சிறுவழியின் சிறுமலர்

தான் ஒரு மறைப்போதகராக, மறைவல்லுநராக, மறைசாட்சியாக மாறவேண்டும் என மனதில் எண்ணி வாழ்ந்தவர் குழந்தை இயேசுவின் புனித தெரசா. ஆனால், அது நிறைவேறாத கனவு. பெருங்கனவுகள் மறக்கப்பட்டன. அதற்குக் காரணமாக அமைந்தது திருத்தூதர் பவுலின் அன்புக் கவிதை (1 கொரி 13). பவுல் பாடல் வரிகள் திசைகளை மாற்றின. ''அன்பே எனது அழைப்பிற்குப் புதிய திறவுகோல் ... திருஅவைக்கு அன்பான இதயம் தேவைப்பட்டதை நான் உணர்ந்தேன். அந்த அன்பு நெருப்பால் பற்றி எரிய வேண்டும் என்பது என் ஆவலாக மாறியது ... உணர்வின் உச்சத்தில் மகிழ்வுடன் நான் குதூகலித்து குரல் எழுப்பினேன். இயேசுவே, என் அன்பே, இறுதியாக என் வாழ்வின் அழைப்பை நான் அறிந்து கொண்டேன். அன்புதான் என் அழைத்தல்!''என்று தனது வாழ்வு வரலாற்றில் குறிப்பிடுகிறார் சிறுமலர். அவரது ஆன்மீகப் பயிற்சிமுறை ''சிறுவழி'' என்றே இன்றும் பெயரிடப்பட்டுப் பின்பற்றப்படுகிறது.

சிறிய காரியங்களைப் பிரமாணிக்கத்துடனும் பிரியமுடனும் செய்ததால் புனிதத்தின் புகழ் அடைந்த சிறுமலரின் முன்மாதிரியை எவரும் பின்பற்றலாம். இதற்கெனத் தனிப் பயிற்சியும் படிப்பும் தேவையில்லை. இதயம் அன்பால் நிறைந்திருந்தால் போதும்! அன்றாட அலுவல்கள் யாவும் அடுக்குடனும் அழகுடனும் நிறைவேறும்.

''இயேசுவின் புனித தெரேசா நமக்கு விட்டுச் செல்லும் தனிப்பெரும் வழிகாட்டுதல் ''சிறுவழி'' என்று அழைக்கப்படுகிறது. இது அன்பின் வழி; இறைவனின் அன்பில் நிலைகொள்ளும் ஆன்மீகக் குழந்தைப் பருவம். இதை எவரும் எளிதாகப் பின்பற்றலாம். அன்பின் வழிக்கு வயது வரம்பும் இல்லை; பயிற்சித் தேர்ச்சியும் தேவை இல்லை. இதுவே தந்தைக் கடவுள் தம் மகன் வழியாக மிகச் சிறியோராகிய நமக்கு வெளிப்படுத்தும் அருள்நெறி வழிகாட்டுதல்'' என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ் (இறைவனின் இரக்கத்தில் அன்புகொள்ளும் தன்னுறுதி - திருத்தூது ஊக்கமடல், எண். 14).

### பார்க்கவும் பாராட்டவும் வேண்டாம்!

ஆங்கிலக் கவிஞர் தாமஸ் கிரே தனது கவிதை ஒன்றில் யாரும் பார்க்காத, பறிக்காத காட்டு மலர்கள்பற்றிக் குறிப்பிடுகிறார். இவற்றின் இருப்பிடமும் அழகும், வர்ணமும் வடிவமும் யாரும் தொட்டு உணர்ந்ததும் இல்லை; முகர்ந்து மகிழ்ந்ததும் இல்லை. இதற்காக அவை தளிர்க்காமலும் இல்லை, பூக்காமலும் இல்லை. அவை தம் கடமையைக் கருத்துடன் செய்கின்றன. ஆண்டாண்டு தோறும் செய்கின்றன. இதை ஒத்ததுதான் சீரிய மனம்

படைத்த மனிதரின் வாழ்வு. பார்ப்பதற்கும் பாராட்டுவதற்கும் ஆட்கள் இல்லாதுபோயினும் அவர்கள் தத்தம் கடமைகளை அன்றன்று செய்து முடிக்கின்றனர். இதைத்தான் சிறியன செய்திடினும் சிறப்புடன் நிறைவேற்றுவதின் உட்பொருள் என்கிறோம். யார் பார்க்கின்றார்களோ பாராட்டுகின்றார்களோ, பிரமாணிக்கமுடன் வாழ்வோர் சிறியன சிறப்புடன் செய்கின்றனர். இதையே இந்திய ஆன்மீகமும், "நிஷ்காம கர்மா" – பற்றற்ற – பலன்கள் எதிர்பாராத செயல் என்கிறது. அன்றாடம் நிறைவேற்றி புனிதத்தின் நிறைவு காண்பதற்குப் பல வழிமுறைகள் உள்ளன.

* சிறியவற்றிலிருந்து தொடங்கும் புனிதம்
* காலையில் கண் விழித்ததும் இறைவனுக்கு நன்றி கூறுதல்.
* இன்றைய நாள் இனியதாக அமைந்திட இறைவனிடம் அர்ப்பணித்தல்.
* இந்த நாளுக்கென திட்டம் வகுத்தல்.
* அன்றாடக் கடமைகளை சிறப்புடன் செய்தல்.
* உதவி தேவைப்படுபவரைத் தேடிச் சென்று தோள்கொடுத்தல்.
* நல்லன ஆற்றுபவரை நெஞ்சார்ந்து பாராட்டுதல்.
* குறைகள் காணுமிடத்து இன் முகத்துடன் தீர்ப்பிடாது சுட்டிக்காட்டுதல்.
* தன் குற்றம் குறைகளைத் துணிவுடன் ஒப்புக்கொள்ளல்.
* புதியன கற்கும் ஆர்வம் வளர்த்தல்.
* தவறுகள் நேரிடினும் சுயசுத்திகரிப்புச் செய்தல்.
* அன்றாட நிகழ்வுகளை ஆய்ந்தறிதல்.
* நேற்றைய அனுபவங்களிலிருந்து கற்றல்.
* அகம் புறம் சுத்தம் பேணுதல்.
* நாடு, உலக, சமூக நிகழ்வுகளை ஆய்ந்தறிதல்.
* இறைப்பிரசன்னத்தில் மீண்டும் அர்ப்பணித்தல்.

## வாழிய குமரி வாழியவே

அருள் நிதி. **மு. செபாஸ்டியான், மாடத்தட்டுவிளை**

பற்பல ஆண்டு காலமாக
பட்ட கொடுமை மாறிடவே
அற்புத மானத் தலைவர்களால்
அடைந்தோர் விடுதலை குமரியிலே!
சாதி வெறியர் நம்மவரை
சதித்து அன்று கொன்றனரே!
சோதி மயமாய் பகுத்துணர்ந்து
சுதந்திர எண்ணம் உதித்ததுவே!
அய்யா வழியில் அமைதிப்போர்
அகிலத் திரட்டால் மலர்ந்ததுவே!
பொய்யால் நின்றோர் முகமூடி
பீய்த்து எறியப் பட்டனவே!
கிறிஸ்தவ மிசனரி, மற்றோரும்
இந்தப் போரில் இறங்கினரே!
பிறவுள சமயத் தலைவர்களும்
பற்று கொண்டு இறங்கினரே!
உயர்ந்த சாதி என்போரின்
உச்சம் தொட்டக் கொடுமையால்
பயந்து நடுங்கிய நம்மக்கள்
பட்டம் தாணுவை எதிர்த்தனரே!
ஈழவர் நாடார் வேளாளர்
இன்ன பிறவுள சாதியரும்
இழிவாய் நடத்தப் பட்டதாலே
இறங்கி போரில் குதித்தனரே!
பெண்கள் மேலுடல் மறைப்பதற்கு
பெரிதாய் மறுக்க பட்டனரே
பெண்தோள் சீலைப் போராட்டம்
பன்நெடுங்காலம் நடந்தனவே
திருவாங்கூரில் மன்னர் பலர்
தொடர்ந்து கொடிய சட்டமிட்டு
தெருத்தெருவாக இக்கொடுமை
தளிர்த்து வளர விட்டனரே!
வருகை சிரமக் கொங்கையான்
வாடிப் போன நம்மக்கன்
அருமை யானத் தலைமைகளில்
அணிவகுத்து நின்றனரே!
திருக்கொச்சியின் முதல்வரான
திருந்தா பட்டம் தாணுவினால்
பெருமைக் குரிய வீரர்கள்
புதுக்கடைப் போரில் மாண்டனரே!
பதினொரு வீரர் சுடப்பட்டு,
பரவிய இப்போர் உச்சமுடன்
கதிகலங்கிடவே, நேசமணி
களத்தில் தலைமை ஏற்றாரே!
சிதம்பர நாதன் குஞ்சன்நாடார்
சீர்மிகு அருமை நூர்முகமதி
முத்துக் கருப்பன் இளங்கோபோல்
முன்னணி தலைவர் களம் கண்டனரே!
கர்ம வீரர் காமராசர்
கன்னியா குமரி என்றாரே!
குமரித் தந்தை நேசமணி
போன்றோர் புகழும் வாழியவே!



## திருத்தந்தை பிரான்சிஸ் பார்வையும் பாதையும்

அருள்பணி. **ம. டைட்டஸ் மோகன்**

"மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்" புனிதத்தை மனிதமாக்கும் திருத்தூது ஊக்கவுரை திருப்பிப்போடாத அப்பங்களாக வாழ்வது கிறிஸ்தவர்க்கு அர்த்தமல்ல; சுட்ட அப்பத்தையே சூடுபண்ணித்தரும் சூழலை இனியும் இறைவன் பொறுத்துக் கொள்ளமாட்டார். புனிதப் பந்தியில் அழுகிப்போன அத்திப்பழங்களை வீசியெறிந்து விட்டு ஆற்றல்தரும் அன்பு பானங்களை பருகுவதே ஏற்றது. எத்தனை நாளைக்குதான் ஆண்டவனையும் ஆன்மீகத்தையும் விண்ணகத்தில் வைத்திருப்பது? எத்தனை முறைதான் ஆடம்பரங்களோடும், சம்பிரதாயங்களோடும் ஆன்மீகத்தை அடகு வைப்பது? "கடவுள்போல வந்து காப்பாத்துனீங்க" எனும் குரலுக்குப் பின்னால் புதைந்திருக்கும் மனிதத்தின் புனிதத்தை எல்லா தருணங்களிலும் அனுபவிக்க வேண்டாமா? மனிதர்களை புனிதர்களாக்கும் முயற்சியில் ஈடுபடும் ஆன்மீக வியாபாரிகள் இனி நமக்கு வேண்டாம். மாறாக, புனிதத்தை மனிதமாக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் போன்ற மாமனிதர்களே தேவை. அது எப்படி? என்பதற்கே இப்பதிவு.

**புனிதம் – திருஅவையின் அழைப்பு :**

முழுமை, தூய்மை, அர்ப்பணிப்பு, தெய்வீகம் என பல அர்த்தங்கள் "புனிதம்" என்ற சொல்லின் மூலத்திற்கு உண்டு. பெரும்பாலும் கடவுள், மதம், சடங்கு சார்ந்ததாகவே இதனை பாவிக்கிறோம். கடவுள் ஒருவரே தூயவர். "உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்" (மத் 5:48). நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம் (1தெச 4:3). "நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்" (எபே1:4). இப்பதிவுகள் யாவும் தூய வாழ்வில் நாமும் பங்கேற்கக் கடவுள் நமக்கு தரும் அழைப்பே!

இரண்டாம் வத்திக்கான் சங்கமும், "கிறிஸ்தவ மக்கள்... எந்நிலையில் இருப்பினும், எப்படி இருப்பினும் ஒவ்வொருவரும் தமக்குரிய முறையிலே, தந்தைக் கொண்டிருக்கும் இதே தூய்மைநிலையின் நிறைவிற்கு ஆண்டவரால் அழைக்கப் பெறுகிறார்கள்"(திருச்சபை ஏடு, எண் 11) என்கிறது. திருஅவை சட்டமும், "அனைத்துக் கிறிஸ்தவ விசுவாசிகளும், தத்தம் வாழ்க்கை நிலைக்கேற்ப, புனித வாழ்க்கை நடத்தவும், திருச்சபையின் வளர்ச்சி மற்றும் அதன் இடைவிடாத தூய்மைப்படுத்துதலை மேம்படுத்தவும் தம் ஆற்றலை அர்ப்பணிக்க வேண்டும்" (எண் 210) என்கிறது. இங்ஙனம் கத்தோலிக்க திருஅவையின் புனிதம் பற்றிய அணுகுமுறை அமைந்துள்ளது. புனிதம் அனைவருக்கும் சாத்தியப்பட வேண்டு மென்றும் திருஅவை எதிர்பார்க்கிறது.

இவ்வணுகு முறைக்கு கூடுதல் பலம் சேர்க்கவும், அதே வேளையில் அன்றாட வாழ்விற்கு அர்த்தம் தரும் விதமாகவும் அமைந்திருப்பது தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் புனிதம் பற்றிய பார்வை. அவர் 2019 ஆண்டு அனைத்து புனிதர்களின் பெருவிழாவில், "எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த புனிதர்கள், ஒவ்வொரு நாள் வாழ்விலும் வெற்றி, தோல்விகளை அனுபவித்து, அவற்றிலிருந்து மீண்டு எழுவதற்கு ஆண்டவரில் வலிமையைக் கண்டவர்கள். நம் கண்களை விண்ணை நோக்கி உயர்த்தவும், இவ்வுலகின் எதார்த்தங்களை மறந்துவிடாமல், அதேநேரம், அவற்றை துணிச்சல் மற்றும், நம்பிக்கையுடன்

எதிர்கொள்ளவும், புனிதர்களின் நினைவு நம்மை இட்டுச்செல்கின்றது'' என்றார். 2021 ஆம் ஆண்டிற்கான செய்தியில், ''நாம் புனிதத்துவத்தைக் கண்டு அச்சம் கொள்ளவேண்டாம், ஏனெனில், அது நம் சக்தியையோ, உயிர்துடிப்பையோ, மகிழ்வையோ நம்மிடமிருந்து பறிப்பதில்லை, மாறாக, இறைத்தந்தை நம்மைப் படைக்கும்போது, நமக்கென தன் மனதில் கொண்டிருந்ததற்கு இயன்ற வகையில் நாம் உருவாகவும், நம் உள்இயல்பிற்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்கவும் அது உதவுகிறது. நம் பார்வையை மேல்நோக்கி வைக்கவும், அன்புகூரப்படவும், கடவுளால் விடுவிக்கப்படவும், தூய ஆவியாரால் வழிநடத்தப்படவும் அஞ்சவேண்டாம், புனிதத்துவம் என்பது உங்களை மனிதநிலைக்குத் தாழ்ந்தவராக மாற்றுவதில்லை, ஏனெனில், இது உங்கள் பலவீனங்களுக்கும் இறையருளின் வல்லமைக்கும் இடையே நிகழும் சந்திப்பு'' என்றார். இங்ஙனம் விண்ணில் கூடுகட்டிய புனிதத்தை மண்ணகக் குடிசையில் கண்டுகொள்ள பாதை காட்டியுள்ளார். வெகுசிலரை வட்டமிட்டு பலருக்கு எட்டாக்கனியாக இருக்கும் புனிதத்தை எல்லோரும் சாத்தியப்படுத்தும் சூத்திரத்தை கற்றுத்தந்துள்ளார். ''மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்'' - திருத்தந்தை பிரான்சிஸ்

குறிப்பாக, கடந்த 2018 மார்ச் 19 - யில் அவர் வெளியிட்ட *Gaudete et exsultate(*GE*)* அதாவது, ''மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்'' என்கிற திருத்தூது ஊக்கவுரையில் புனிதத்தை மனிதமாக்கி அன்றாட வாழ்விற்கு அர்த்தம் சேர்க்கும் வழிமுறைகளை சுட்டிக்காட்டுகிறார். புனிதத்துவத்திற்கான அழைப்பை அதன் அனைத்து அபாயங்கள், சவால்கள் மற்றும் வாய்ப்புகளுடன் அன்றாட வாழ்வியல் நடைமுறையில் முன்மொழிந்து (GE 2), ''பக்கத்து வீட்டு புனிதர்களிடமிருந்தும்'' (GE 6) உத்வேகம் பெற ஊக்குவிக்கிறார்.

**இம்மடலிலிருந்து சில சிந்தனைகள்**

இயேசு மலைப்பொழிவில் (மத்தேயு 5:12) கற்பித்த ''மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்'' என்கிற படிப்பினையை ஏன் திருத்தந்தை அன்றாட வாழ்வில் புனிதத்தன்மை குறித்து போதிக்கும் மடலின் தலைப்பாக தேர்ந்தெடுத்தார்? காரணம், மகிழ்வே புனிதத்துவத்தின் அடித்தளம். ''மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்'' எனும் கிறிஸ்துவின் அழைப்பிற்கு எப்படி பதில் கொடுப்பது? என்பதற்கு ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பான, ''எனக்கு பணிந்து நடந்து, மாசற்றவனாய் இரு'' (தொநூ 17:1) என்கிற அழைப்பே நமக்கும் தரப்படுகிறது. கடவுள் ஒவ்வொருவரையும் அன்பில் ''தூயோராகவும் குற்றமற்றவராகவும்'' இருக்கத் தேர்ந்தெடுத்துள்ளார்'' (GE 2). தூய்மை அல்லது புனிதமே திருஅவையின் மிகவும் கவர்ச்சிகரமான முகம்'' (GE 9). அம்முகத்தைப் பெற தேவையான அனைத்தையும் நமக்கு திருஅவை வழங்குகிறது.

**புனிதத்துவ அழைப்பு எல்லாருக்குமானது**

''புனிதமாக இருப்பதற்கு ஆயராகவோ, குருவாகவோ அல்லது துறவியராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. சாதாரண விவகாரங்களிலிருந்து விலகி செபத்தில் அதிக நேரம் செலவிடக்கூடியவர்களுக்கு மட்டுமே புனிதம் சாத்தியம் என்று நினைக்கும் சோதனை நமக்கு அடிக்கடி ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலை இல்லை. நம் வாழ்க்கையை அன்புடன் வாழ்வதன் மூலமும், நாம் எங்கு பார்த்தாலும், நாம் செய்யும் எல்லாவற்றிலும் சாட்சியாக இருப்பதன் மூலமும் நாம் அனைவரும் புனிதமாக இருக்க அழைக்கப்படுகிறோம்'' (GE 14). உண்மையான அன்பின் செயல்களே நமக்கு நிறைவான மகிழ்வைத் தரும்.

**புனிதத்துவத்திற்கான சவால்கள்**

நம்மை வழிதவறி நடத்தக்கூடிய புனிதத்தின் தவறான வடிவங்களாக இரண்டினை திருத்தந்தை இம்மடலில் முன்மொழிகிறார் (GE,35). ஒன்று, நிகழ்கால அறிவுசார் கொள்கை (Gnosticism) மற்றொன்று மனித நல்லியல்பில் நம்பிக்கை (Pelagianism).

தொடக்ககாலத் திருஅவையில் நிலவிய

இவ்விரண்டு முரண்பாடுகளும் இன்றும் தொடர்ந்து நம்மைத் துன்புறுத்துகின்றன. இவற்றில் மூழ்குவோர் புனிதத்துவ வாழ்க்கைக்கு அழிவுகரமான புதிய வடிவங்களை மேற்கொள்கின்றனர். கடவுள், உலகு, மனிதன், விடுதலை, அறநெறி போன்றவற்றில் இவர்களின் பார்வை புனிதத்துவத்திலிருந்து விலகுவதாய் உள்ளது. ஏனெனில் இத்தகையோர் எவரும் கிறிஸ்துவைப் பற்றியோ, மற்றவர்களைப் பற்றியோ கவலைப்படுவதில்லை. தூய்மைக்கும் மீட்புக்கும் கடவுள் தேவையற்றவர் என்று கூறி கடவுளிடமிருந்து கவனத்தைத் திசைத்திருப்புகிறார்கள். "இதன் மூலம் ஒருவர் நற்செய்தியை அறிவிப்பதற்குப் பதிலாக, மற்றவர்களை பகுப்பாய்வு செய்து வகைப்படுத்துகிறார், இறைவனின் அருளிற்கு கதவைத் திறப்பதற்குப் பதிலாக, ஆய்வு செய்வதிலும் சரிபார்ப்பதிலும் தனது ஆற்றல்களைக் குறைத்துக்கொள்கிறார்" (GE 35). இவர்கள் "கிறிஸ்து இல்லாத கடவுளையும், திருஅவை இல்லாத கிறிஸ்துவையும், மக்கள் இல்லாத தேவாலயத்தையும்" விரும்புகிறார்கள்(GE 37). இத்தகைய அணுகுமுறையில், புனிதத்தன்மை சாத்தியமில்லை, ஏனெனில் அறிவு மட்டுமே ஒரு நபரை புனிதமாக்க முடியாது (GE 39).

தொடர்ந்து இம்மடலின் இயல் மூன்று (GE 63-94) புனிதத்துவத்தின் பாதை கிறிஸ்துவே என்பதனை விவிலிய பின்னணியில் மலைப்பொழிவுப் பேறுகளோடு விளக்குகிறது. இயல் நான்கு, இன்றைய உலகில் புனிதத்துவத்தின் அறிகுறிகள் இருப்பதை எடுத்துரைக்கிறது (GE 110-157). அதன்படி நம்மிடம் துலங்க வேண்டிய புனிதத்துவ கூறுகளாவன :

1. **உறுதிப்பாடு, பொறுமை மற்றும் சாந்தம்** (**GE,112-121**) "உள்வலிமையின் இவ்வாதாரங்கள்; வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகளுக்கு மத்தியில் விடாமுயற்சியுடன் இருக்கவும்,..மற்றவர்களின் விரோதம், காட்டிக்கொடுத்தல் மற்றும் தோல்விகளைத் தாங்கவும் உதவுகிறது" (GE 112).

2. **மகிழ்ச்சியும் நகைச்சுவை உணர்வும்** (**GE 122-128**) மகிழ்ச்சியும் நகைச்சுவை உணர்வும் புனிதத்தின் மற்றொரு அடையாளம். கிறிஸ்தவ வாழ்வு என்பது தூய ஆவியில் மகிழ்வதே (உரோ 14:17).

3. **தைரியம் மற்றும் பேரார்வம்** (**GE 129-139**) நற்செய்தியை அறிவிப்பதற்கான பேரார்வத்தையும் அதன்வழி இவ்வுலகில் ஒரு அடையாளத்தை விட்டுச் செல்வதற்கான உந்துதலையும் புனிதம் தருகிறது.

4. **சமூகத்தில் ஒன்றாக பயணித்தல்** (**GE 140-146**) "புனிதத்தின் வளர்ச்சி என்பது சமூகத்தில், மற்றவர்களுடன் அருகருகே பயணிப்பதாகும்" (GE 141). காரணம், மற்றவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்கிறோம்.ஆதரவையும் உறுதிப்பாட்டையும் பெறுகிறோம்,

5. **தொடர் இறைவேண்டல்** (**GE 147-157**) பணம், மற்றும் அதிகாரம் எனும் ஆயுதங்களால் அல்ல, மாறாக, இறைவேண்டல் எனும் ஆயுதத்தின் துணைகொண்டு, இவ்வுலகைப் பேணிக் காக்கின்றனர் புனிதர்கள்; என்பதனை ஒருபோதும் மறவோம்.

**இறுதியாக**

இயல் ஐந்து, புனிதத்துவத்தை வாழ்வாக்க தொடர் ஆன்மீகப் போர், விழிப்புநிலை மற்றும் தேர்ந்து தெளிதல் (GE 158-175) அவசியம் என்கிறது. "கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு நிலையான போர். தீயோனின் சோதனைகளைத் தாங்குவதற்கும் நற்செய்தியைப் பிரகடனப்படுத்துவதற்கும் நமக்கு வலிமையும் தைரியமும் தேவை" (GE 158). இதனை விழிப்புநிலை, தேர்ந்து தெளியும் ஞானம் பெற்றுத்தருகிறது. இனியும், மீன்களைப் போல கண்களைத் திறந்து வைத்துக் கொண்டே தூங்கிக் கொண்டிருக்காமல் புனிதம் நோக்கிய பயணத்தை அன்றாட வாழ்வில் நம் உள்ளிருந்து துவங்கி அண்டை வீட்டு உறவுகளில் நல்லுணர்வுகளில் கண்டு அகமகிழ்வோம்!



# நமது மண்ணின் புனிதர்கள்

திரு. **ஜோசப் சேவியர்**
(பரக்குன்று)

குமரி மண் பல புனிதர்களின் காலடிபட்ட பெருமைக்குரியது. அதிக கிறிஸ்தவர்கள் உள்ள மாவட்டமாகவும், அதிக படித்தவர்கள் உள்ள மாவட்டமாகவும் நம் மாவட்டம் திகழ இத்தகைய புனிதர்களின் களப்பணியே அடிப்படைக் காரணம். அதில் மிக முக்கியமானவர்கள் மூன்று புனிதர்கள்.

முதலாவது திருத்தூதர் தோமா. இயேசுவின் திருத்தூதர்களில் ஒருவராலேயே கிறிஸ்தவம் தோற்றுவிக்கப்பட்ட பெருமை குமரி மண்ணுக்கு உண்டு. தோமையார் பணியாற்றிய ஒரு சில பணித்தளங்களில் குமரிமாவட்டமும் ஒன்று. உலகிலேயே பழமையான, செயல்படும் ஆலயம் இன்றும் இருப்பது இங்கே மட்டும் தான். கிபி58 முதல் இந்த ஆலயம் இயங்கி வருகிறது! கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்தவம் நம் மண்ணில் நடப்பட்டது. கிறிஸ்தவம் நமது மண்ணில் வந்தபின் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு தான் இஸ்லாம் எனும் ஒரு மார்க்கமே தோன்றியது என்பது குறிப்பிடத் தக்கது.

கிபி 52 களில் மலபார் பகுதிக்கு வந்த திருத்தூதர் தோமா, அங்கிருந்து நமது பகுதிக்கு நற்செய்தி அறிவித்தலுக்காக வந்தார். அங்கிருந்த சில யூதர்களிடம் நற்செய்தியைப் பகிர ஆரம்பித்து படிப்படியாக எல்லா மக்களுக்கும் இயேசுவைப் பற்றிப் போதித்தார். பல திருச்சபைகளையும் ஏற்படுத்தினார். செயிண்ட் தோமா கிறிஸ்டியன்ஸ் என்றும், நஸ்ராணிஸ் என்றும் இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

தமிழ்க் கலாச்சாரத்துடனே கிறிஸ்தவத்தைப் போதிப்பதில் தோமா வெற்றிகண்டவர். ஆனாலும் கிறிஸ்தவ மதம் எளிதாக மக்கள் மனதில் இடம்பெறவில்லை. ஏற்கனவே ஆழமாய் வேரூன்றிப் போயிருந்த ஆதிக்க மனநிலை அவரை வன்மத்துடனேயே அணுகியது. அதிலும் குறிப்பாக தோமையாரின் சமத்துவ சிந்தனை அவர்களை எரிச்சலூட்டியது. எல்லோரும் சமம், சாதிகள் பார்ப்பது தவறு, சமூக ஏற்றத்தாழ்வு பார்ப்பது தவறு எனும் போதனைகள் அவர்களை கடும் கோபமடையச் செய்தது. இந்த மதம் பரவினால் தங்களுடைய பிரிவினை ஆதிக்கம் எடுபடாமல் போய்விடும் என அவர்கள் பயந்தார்கள்.

ஏழை எளிய மக்கள் மட்டுமல்லாமல், உயர்குல, அரசர் குல மக்கள் பலரையும் அவர் கிறிஸ்தவத்தில் ஈர்த்ததால் சமூகத்தில் பெரும் மாற்றம் உருவாகும் எனும் அச்சம் அவர்களை ஆட்டிப் படைத்தது. தோமா அவர்களின் படுகொலைக்கு அதுவே அடிப்படைக் காரணமாய் மாறியது. கிபி 72ல் சென்னையில் அவர் படுகொலை செய்யப்பட்டார். ஆனாலும், அவர் விதைத்த அந்த ஆதிகால விதைகள் நமது மண்ணில் கிறிஸ்தவம் முளைவிடக் காரணமானது.

இரண்டாவது புனித சவேரியார். திருத்தூதர் தோமா நம் மண்ணில் கிறிஸ்தவத்தின் முதல் விதைகளைத் தூவினாலும், அதை மிகப்பெரிய அளவில் பரப்பியவர் புனித சவேரியார் தான். அவரே நம் மண்ணில் பணியாற்றிய மிகப்பெரிய புனிதர் எனலாம். நடந்து நடந்தே நமது நிலமெங்கும் பணியாற்றிய மிகப்பெரிய புனிதர் அவர். ஒரு விளக்கைச் சுமந்து கொண்டு கடலோரப் பகுதிகளில் நடந்து நடந்து மக்களுக்கு நற்செய்தி அறிவித்தார். குறிப்பாக அவரது பணி மீனவர் சமூகங்களில் அதிக அளவில் இருந்தது. பறவர் வாழ்க்கையை பரமன் வாழ்க்கையோடு இணைக்க அவர் பாடுபட்டார்.

தமிழ் மொழி தெரிந்தால் தான் மக்களுக்கு நற்செய்தியை எளிதில் போதிக்கமுடியும் எனும் சிந்தனையுடன் தமிழைக் கற்றார். முக்கியமான செபங்கள், மறைக்கல்விக் குறிப்புகள் போன்றவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தார். இதன் மூலம் மக்களுக்கு கிறிஸ்தவத்தைப் பற்றிய புரிதல் அதிகமானது. இன்றைய நற்செய்தியாளர்களைப் போலவோ, தெருமுனை டிராக்ஸ் கொடுப்பவர்களைப் போலவே நற்செய்தியை மட்டும் அறிவித்தவர் அல்ல சவேரியார். மக்களுடைய வாழ்வாதாரத் தேவைகளுக்கான வழிகளையும், மக்களுடைய உயர்வுக்கான வழிகளையும், ஆன்மிகத்தோடு இணைத்தே சிந்தித்தவர்.

புனிதர்களுக்கே உரிய சிறப்பம்சமான சமத்துவப் போதனை சவேரியாரிடமும் இருந்தது. அனைவரும் சமம் எனும் இறைவனின் சிந்தனையை அவர் மக்களுக்கு ஆழமாய்ப் போதித்தார். எல்லோரும் கல்வி கற்கவேண்டும் எனும் உயரிய சிந்தனையோடு பல பள்ளிக்கூடங்களை உருவாக்கியவர். தினமும் இறைவனிடம் செபிக்கவேண்டும், பாவ மன்னிப்பு கேட்கவேண்டும் எனும் வழக்கங்களையும் கற்றுக் கொடுத்தார். இவர் ஏராளமான புதுமைகளையும் செய்ததால் மக்கள் இவருடைய போதனைகளின் மீது நம்பிக்கை வைத்தனர்.

போர்ச்சுகீசிய அரசு அதிகாரிகளிடம் நெருக்கமான உறவை வைத்திருந்ததால், அதன் மூலம் மீனவ மக்களுக்கும் எளிய மக்களுக்கும் பல நலத்திட்டங்கள் கிடைக்க அவர் காரணமானார். 1542ல் இந்தியா வந்த சவேரியார் குமரிக்குச் செய்த அருட்பணி அளப்பரியது. இன்றைக்கு குமரிமாவட்டத்தில் நிறைய சேவியர்கள் உலா வருவதற்கு இவருடைய நீண்ட நெடிய பணிகளே காரணம்.

மூன்றாவது நம் மண்ணின் மைந்தர், சமீபத்தில் புனிதர் பட்டம் பெற்ற புனித தேவசகாயம் அவர்கள். கிறிஸ்தவத்துக்காக உயிர்நீத்த முதல் கிறிஸ்தவர்களில் ஒருவர். திருவிதாங்கூரில் நீலகண்டப் பிள்ளை எனும் ஆதிக்க சாதியின் அடையாளமாய் இருந்தவர், பின்னர் இறைவனில் ஐக்கியமானார். 1712-ல் நட்டாலம் பகுதியில் பிறந்த இவர், 1745-ல் இயேசுவை ஏற்றுக் கொண்டபின் தேவ சகாயமாய் மாறினார். நமது ஊரில் இவரைப் பற்றிய வரலாறுகளும், கதைகளும் மிக எளிமையாகவும் விரிவாகவும் கிடைக்கின்றன.

கிறிஸ்தவ விசுவாசத்தை வெளிப்படுத்தியதுடன் நின்று விடாமல், சமூக மேம்பாட்டுக்காகக் கடுமையாகப் போராடியவர். உயிரைத் துச்சமென மதித்து சமத்துவச் சிந்தனைகளைச் சுமந்து திரிந்தவர். சாதீய அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த மேல்சாதி வியப்பு அவர். கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டால் சமூகத்தின் நிராகரிப்புகளுக்கும், அவமானங்களுக்கும் தப்பி சமமாய் வாழலாம் என பல தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் கிறிஸ்தவத்தில் அடைக்கலமானார்கள். அவர்கள் அனைவருமே சமத்துவத்துடனும், அன்புடனும், கண்ணியத்துடனும் நடத்தப்பட்டனர். ஊரெங்கும் சுற்றித் திரிந்து மக்களிடையே உரையாற்றினார். சொல்லில் செல்வரான இவரது பேச்சினால் ஏராளமான மக்கள் கிறிஸ்துவின் பால் ஈர்க்கப்பட்டனர். இதனால் கடும் கோபமடைந்தவர்கள் அவரைப் பிடித்து, சிறையில் அடைத்து, சித்திரவதை செய்தனர். ஆனாலும் விசுவாசத்தை சற்றும் தளரவிடாமல் பற்றிக் கொண்டார். ஏழு என்பது முழுமையைக் குறிக்கும். இவரது கிறிஸ்தவப் பணியும் வெறும் ஏழு ஆண்டுகளே நீடித்தது. 1752-ம் ஆண்டு அவர் படுகொலை செய்யப்பட்டார்.

குமரிமாவட்டம் இன்றைக்கு பிற இடங்களை விட மத நல்லிணக்கமும், சமூக மேம்பாடும், கல்வியும் சிறப்பாக இருப்பதற்கு தங்கள் இன்னுயிரை ஈன்ற இத்தகைய புனிதர்கள் தான் காரணம். பிற்காலத்தில் சீர்திருத்த சபையினர் தங்களுடைய மத போதனையை குமரி மண்ணில் நிறைவேற்றினாலும், அடிப்படையாய் கிறிஸ்தவத்தை இந்த மண்ணில் அறிமுகம் செய்து உயிர்விட்டவர்கள் இந்த புனிதர்களே. அவர்களை நினைவு கூரவும், அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து அன்பையும், சமூக நீதியையும், ஆன்மிகத்தையும், இறை அன்பையும் கற்றுக் கொள்ளவும் நாம் அழைக்கப்படுகிறோம்.



# புனிதமும் விடுதலை வாழ்வும்

அருள்பணி. M.C. ராஜன்

நாம் வாழும் இந்திய நாடு சில நூற்றாண்டுகள் ஆங்கிலேயர்களின் ஆட்சியில் அடிமைப்பட்டு கிடந்தது. வீரம் செறிந்த இந்திய மக்களின் போராட்டத்தின் விளைவாக, 1947 ஆம் ஆண்டு விடுதலையை பெற்றுக் கொண்டது. 1950 ஆம் ஆண்டு இந்தியா தனது அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டு, இந்தியாவை ஒரு ‘‘இறையாண்மை மிக்க சமய சார்பற்ற சோசலிச பொருளாதாரம் கொண்ட மக்களாட்சி குடியரசாக’’ அறிவித்தது. இதற்கு பின்னால் ஏராளமான நம் முன்னோரின் தியாகம் அடங்கி இருக்கிறது என்பதை ஒரு பொழுதும் நாம் மறந்து விடக் கூடாது.

சுதந்திர இந்தியா பல்வேறு விதமான பிரச்சினைகளை சந்தித்தது. அதில் ஒன்றுதான் மொழி பிரச்சனை. எனவே மொழியின் அடிப்படையில் அமைந்த மாநிலங்களாக பிரிக்கப்பட வேண்டும் என்று பல்வேறு இடங்களில் போராட்டங்கள் வெடித்தது. இதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்ற குழு, போராட்டங்கள் நடந்த பகுதியில் சென்று மக்களை சந்தித்தது. அது வெறுமனே மொழிக்கான போராட்டம் மட்டுமல்ல: மாறாக மொழியின் அடிப்படையில் அமைந்த ஒரு இனத்தின் போராட்டம். ஒரு கலாச்சாரத்தின் போராட்டம், ஒரு புதிய வாழ்வு முறைக்கான போராட்டம் என்பதை உணர்ந்து கொண்டதால், 1956 இல் மொழி வாரியான மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.

இந்தப் பின்னணியில்தான் நாம் வாழுகின்ற இந்த குமரி மாவட்டமும் ஒரு காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு நிலப்பரப்புக்குள் அடங்கி இருந்ததால் ஏராளமான சாதிய கொடுமைகளை, சமய கொடுமைகளை அனுபவித்துக் கொண்டே இருந்தது. குறிப்பாக மொழி அடிப்படையில் தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்பட்ட ஒரு சூழல். எனவே சுதந்திரம் பெற்ற இந்தியாவில், மொழி அடிப்படையில் தாங்கள் தாய் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்று பல்வேறு பெரியவர்களால் அமைதியான முறையில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் ஆளுகின்ற அரசுகள் மக்களை, அவர்களின் உரிமைகளை நம்புவதை விட, ஆயுதங்களையே அதிகமாக நம்புவதால் பெரும் வன்முறைகள் ஏற்பட்டு பலரும் தங்கள் உயிரை தியாகம் செய்ய வேண்டி இருந்தது.

அந்த தியாகத்தின் விளைவாக 1956 நவம்பர் முதல் நாள் தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய நான்கு தாலுகாக்கள் ஒன்றிணைந்து புதிய குமரி மாவட்டம் உருவாக்கப்பட்டு தாய் தமிழகத்தோடு இணைந்தது. இதற்காக போராடியவர்கள், உயிர் நீத்தவர்கள் ஏராளம். இவர்களில் என்றும் நம்மோடு உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர் கொடிக்கால் ஷேக் அப்துல்லா என்கிற எல்லை போராட்ட தியாகி ஆவார். இன்றும் எல்லைப் போராட்டத்திற்காக நடைபெற்ற பசுமையான நினைவுகளோடும், இந்த மண் இன்னும் அதிக வளர்ச்சியை, விடுதலையை பெற வேண்டும் என்ற ஏக்கத்தோடும் தன்னுடைய கடைசி நாட்களை கழித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட சூழலில் ஏன் குமரி

மாவட்டம் தமிழகத்தோடு இணைய நேரிட்டது என்று பார்த்தால், அன்றைக்கு இருந்த சாதிய ஒடுக்கு முறைகள் மொழி பிரிவினைகள் இவையெல்லாம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் எச்சங்களாக இருந்த காரணத்தினால் தான் இன்று குமரி மாவட்டம் பல்வேறு நிலைகளில் சிறப்புற்று விளங்குகிறது. இதற்காக உழைத்த, உயிர் நீத்த, உடமைகளை இழந்த, வாழ்விளந்த நம் முன்னோரை, அவர் தம் நினைவுகளை போற்றி பாதுகாக்க வேண்டியது நமது கடமை என்பதை ஒருபொழுதும் நாம் மறந்து விடக்கூடாது. எனவே இவர்களின் தியாகம்தான் நமது வாழ்வு.

இதுவே, மனிதத்தை மீட்டெடுக்க நடத்திய போராட்டமும், அர்ப்பணமுமே புனிதம் எனப் போற்றப்படுகிறது. திருஅவை சகல புனிதர்களின் விழாவை கொண்டாடுகிற பொழுது, அது நமக்கு நினைப்புவூட்டுவதெல்லாம், நம் சமூகத்தில் இருக்கிற இருளை அகற்றி, ஒளியாய் பற்றிஎரிய தம்மையே அர்ப்பணித்தவர்கள் தான் புனிதர்கள் என்று நமக்குத் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. இந்த புனிதர்களின் அடிச்சுவட்டில், வழிகாட்டலில் நாமும் புனித வாழ்வு வாழவே அழைக்கப்படுகிறோம்.

அப்படி என்றால் இன்றும் நம் மண்ணில் குறிப்பாக குமரி மாவட்டத்தில், இருளின் சக்திகளாக இருக்கும் வரதட்சணை கொடுமை, குடும்ப வன்முறைகன் போதை அடிமைத்தனம், சாதிய ஏற்றத்தாழ்வுகள், சமயப் பிரிவினைகள் இவற்றை எதிர்த்து போராடுவதும், அவற்றை அழித்து இந்த மண்ணை புனிதமிக்க மண்ணாக கட்டி எழுப்ப உழைப்பதும் தான் நம்மையும் புனிதர்களாக, தியாகிகளாக அடையாளப் படுத்துகிறது. இதுவே நம் பிறப்பின் நோக்கம் என்பதை நினைவில் கொள்வோம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டு இந்த நாடு முழுவதும் இருக்கின்ற அனைத்து மக்களுக்கும், சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் அனைவருக்கும் நீதி என்பவை உறுதிப்படுத்தப்பட்ட ஒரு இந்தியாவை உருவாக்குவதில், தமிழகத்தை உருவாக்குவதில், குமரி மாவட்டத்தை உருவாக்குவதில் இன்னும் ஏராளமான கடமைகள் நமக்கு இருக்கிறது என்பதை நினைப்புவூட்டுகிற மாதமாகவே இந்த நவம்பர் மாதம் அமைந்திருக்கிறது என்றால் மிகையல்ல.

இவற்றிற்காக நாம் நம்மை அர்ப்பணிக்க மறந்தால், வெறும் வழிபாடுகளும் வெறும் கொண்டாட்டங்களும் இந்த மண்ணிற்கு எந்த வளமையும், பெருமையும் சேர்ப்பது இல்லை. மாறாக நாம் இன்னும் அதிக அர்ப்பணத்தோடு ஒன்றிணைந்து உழைப்பதில் தான் நம் முன்னோர் சிந்திய ரத்தத்திற்கும் அவர்கள் செய்த தியாகத்திற்கும் நன்றியோடு இருக்கிறோம் என்பதை உறுதி செய்ய நாமும் இணைந்து உழைக்க முன் வருவோம்.

**வாழ்க தமிழ்! வாழிய தமிழ்நாடு!**

### சிந்தனை துளிகள்



**தலைமைப் பண்பு**

**கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்தும் தண்டிக்க வேண்டிய நேரத்தில் தண்டித்தும் கனிவு காட்ட வேண்டிய நேரத்தில் கனிவுக் காட்டியும் வழிநடத்துபவர்களே சிறந்த தலைமைப்பண்பாளர்கள்.**

**அமைதியான வளமையான நாட்டை உருவாக்க பாராமரிக்க நேர்மை, கட்டுபாடு, நல்ல வேலைவாய்ப்பு, உழைப்பு, நியாயமான ஊதியம், சேமிப்பு சக மனிதரிடம் அன்பு ஆகியவை தேவை.**



# இளையோர் எதிர்நோக்க வேண்டிய போதையில்லாத பாதை!

அருள்முனைவர். **து. பிரான்சிஸ் சேவியர் நெல்சன்**
இயக்குநர், திருப்புமுனை போதைநோய் நலப்பணி, கோட்டாறு மறைமாவட்டம்.

**அறிமுகம்**

'எதிர்நோக்கு' என்ற வார்த்தை சிந்தனையிலும், உணர்விலும், சொல்லிலும், செயலிலும் மிகமிக அதிகமாக வெளிப்படும் பருவம்; இளமைப்பருவம். 'எதிர்நோக்கு' என்ற சொல்லாடல் உரையாடல்களிலும், உறவாடல்களிலும், செயல்பாடுகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் வயதுதான் இளம்வயது. எனவே 'எதிர்நோக்கு' என்ற உன்னதக் கருத்துரு இல்லாமல் இளமைப்பருவம் இல்லை என்று கூறலாம். இளமைப்பருவத்திற்கு அர்த்தம் கொடுப்பது 'எதிர்நோக்கு' என்று நமது எண்ணத்தைத் திண்ணமாய் எடுத்துரைக்கலாம்.

**மனித வாழ்வின் உச்சப்பருவம்**

மனித வளர்ச்சியில் 'கருவுறுதல்' தொடங்கி 'இறத்தல்' வரையில் சிசுப்பருவம், பாலப்பருவம், மழலைப்பருவம், சிறுவப்பருவம், வளரிளம்பருவம், இளமைப்பருவம், திருமணப்பருவம், முதிர்ச்சிப்பருவம், முதுமைப்பருவம் என்று பலப்பருவங்கள் இருந்தாலும் இளையப்பருவத்தின் வளர்ச்சியின் உச்சப்பருவம் ஆகும். இப்பருவத்தில்தான் இளையோருக்குத் தன்னிலைத் தெளிவு ஏற்படுகின்றது. தன்னிலைத் தெளிவு ஏற்படாவிட்டால் தன்னிலைக் குழப்பம் ஏற்படுகின்றது. தன்னிலைத் தெளிவு வாழ்வின் உச்சிக்கு அழைத்துச் செல்கின்றது. வாழ்வின் தெளிவைக் கண்டுணர்ந்த இளயோரால் தாழ்நிலையில் தவழ முடியாது.

**இளையோரை நெருக்கும் எண்ணற்றச் சவால்கள்**

இன்றையச் சூழலில் இளையோர் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் கொஞ்சமல்ல. தாயின் கருவரையில் ஒரு குழந்தையாக உருவாக ஆரம்பித்த நாளிலிருந்து, ஒரு சிசுவாக பிறந்து, ஒரு மழலையாகத் தவழ்ந்து, ஒரு சிறாராக வளர்ந்து, ஓர் இளையோராக வளர் இளம்பருவம் அடைந்து, ஓர் இளைஞராக ஆளாகும்போது தாண்டி வருகின்ற தடைகள் எத்தனை. சிக்கவைக்கும் சிக்கல்கள் ஏராளம். உடல்ஈர்ப்பு சார்ந்த சவால்கள், உளப்பதிவுகள் சார்ந்த சவால்கள், குடும்பஉறவு சார்ந்த சவால்கள், சமூகஊடகங்கள் சார்ந்த சவால்கள், சினிமாக்கலாச்சாரம் சார்ந்த சவால்கள், படிப்பு வேலை சார்ந்த சவால்கள் வந்த சேர்ந்து கொள்கின்றன. மேலே சொல்லப்பட்ட சவால்களோடு போதைக்கலாச்சாரமும் ஒரு முக்கியச் சவாலாக விசுவரூபம் எடுத்து நிற்கின்றது.

**போதையாக்கும் போதையின் பாதை**

போதையினால் மேதையானவர்கள் யாருமேயில்லை. பேதையானவர்கள்தான் அதிகம். போதையின் பாதையில் செல்கின்றவர் பேதையாவதைத் தவிர மேதையாவதற்கான வாய்ப்பே இல்லை. போதைக் காட்டும் பாதை வாழ்வுக்கானது அல்ல, போதை காட்டும் பாதை அழிவுக்கானது. போதைக்கு ஆளானால் பாதிப்புக்கு உள்ளாக்காமல் விடுவதில்லை. எந்தப்போதைப்பொருளாக இருந்தாலும் அந்தப்போதைப்பொருளின் தன்மைக்கேற்ப பாதிப்பை விளைவிக்கின்றது. சிகரெட்டாக இருக்கட்டும், அது நுரையீரல் தொடங்கி மூளை வரை பாதிக்கின்றது. கூலிப்பாக இருக்கட்டும், அது வாயில் தொடங்கி மூளை வரை பாதிக்கின்றது. கஞ்சாவாக இருக்கட்டும், அது மூக்கில் தொடங்கி மூளை வரை பாதிக்கின்றது. மதுவாக இருக்கட்டும், அது கல்லீரலில் தொடங்கி மூளை வரை பாதிக்கின்றது. இப்படி ஒவ்வொரு போதைப்பொருளாக எடுத்து ஏற்படுத்தும் பாதிப்புகளைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

'**ஒரே ஒரு தடைவை மட்டும்**' என்று அனுமதி வாங்கி நுழையும் போதைப்பொருளானது 'ஒரு தடவையோடு மட்டும்' என்று தன்னை நிறுத்திக் கொள்வதில்லை. '**சில தடவையாக**' வளர்ந்து '**பலதடவையாக**' தொடர்ந்து, '**அடிக்கடியாக**'

நீடித்து, ‘**எப்போதுமாக**’ நிரந்தரமாகின்றது. இதனால் இளையோருக்கு ஏற்படும் பாதிப்புகளை இங்கு பார்ப்போம்.

**உடலை உருக்குலைக்கும் போதை**

போதைப்பொருள் இளையோரின் உடலை உருக்குலைக்கும் தன்மை கொண்டது. உடலில் தலைமுடி தொடங்கி கால்பாதம் வரையில் பாதிப்பு தன் வரலாறைச் சொல்லிக் கொண்டேயிருக்கும். கல்லீரல், நுரையீரல், மண்ணீரல், இதயம், குடல், நரம்பு, மூளையைச் செயலிழக்கச் செய்கின்றது. உண்மையில் வயது குறைந்த இளையோராக இருந்தாலும், உடலின் உறுப்புகள் எல்லாமே பாதிக்கப்பட்டு வயதானவர் நிலைக்கு கொண்டு வந்துவிடுகின்றது. ‘சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்’ என்ற பழமொழியின்படி பார்த்தால் நல்ல உடல் இருந்தால்தான் ஒரு இளையோரால் நல்ல வாழ்வை வாழ முடியும்.

**மனதை மழுங்கடிக்கும் போதை**

போதைப்பொருள் உடலைச் சீரழிப்பதைப் போலே மனதைச் சீரழிக்கின்றது. போதைப்பொருள் எடுக்கும் ஒரு இளையோரால் சீரான மனநிலையோடு சிறப்பாகச் செயல்பட இயலாது. போதையானது மனதை மழுங்கடிப்பதால் உணர்வுகளைச் சரியாக வெளிப்படுத்த முடியாது. இயல்பாக மகிழ்வாக, நிறைவோடு, நம்பிக்கையோடு படித்து, விளையாடி, வாழ்வைக் கொண்டாட இயலாமல் போய் விடுகின்றது. கோபம், வெறுப்பு, வருத்தம், குற்றஉணர்வு, விரக்தி போன்ற எதிர்மறை உணர்வுகளினால் ‘வாழ்வே மாயமாகி’ விடுகின்றது. போதைக்குப் பலியான மனது போதையை மட்டுமே நாடுவதால் மற்றெல்லா காரியங்களும் புறம்தள்ளப்பட்டு செயல்பாடற்ற நிலைக்கு வந்துவிடுகின்றனர். ஒருபக்கம் சந்தேகம் மறுபக்கம் குழப்பம் என்ற மனப்போராட்டத்தின் இடையே அமைதியை இழந்துவிட நேரிடுகின்றது.

**உறவை உடைத்து நொறுக்கும் போதை**

எந்தப் போதைப்பொருளாக இருந்தாலும் எடுப்பவரோடு முதன்மை உறவுத்தொடர்பாக மாறிவிடுகின்றது. போதை முதலிடத்திற்கு வருவதனால் அனைத்து மனித உறவுகளும் பின்தள்ளப்படுகின்றன. பெற்றெடுத்த அன்னை, வளர்த்தெடுத்த தந்தை, உடன்பிறந்த சகோதரம், உடனிருந்த உறவினர், உரமூட்டிய நண்பர் என்று எல்லா முக்கிய உறவுகளின் நெருக்கமும் அடித்து உடைத்து நொறுக்கப்படுகின்றன. அன்பைப் பெறவேண்டிய, அறிவை அடைய வேண்டிய, பாசத்தை அனுபவிக்க வேண்டிய, நேசத்தைச் சேகரிக்க வேண்டிய, தோழமையைக் கொண்டாட வேண்டிய இளம்வயதில் இவ்விளையோர் தனிமையில் தவிக்கின்றனர், தன்மைப்படுத்தப்படுதலில் அவதிப்படுகின்றனர். போதையால்தான் ஒட்டுமொத்த உறவுகளும் சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளன என்று தெரிந்தும் போதையிலேயே மூழ்கித் தத்தளிக்கின்றனர்.

**சமூகத்தைச் சீரழிக்கும் போதை**

இளையோர் சமூகத்தின் ஓர் அங்கம். சமூகத்தில் இளையோர் போதையில் சிக்கி அழியும்போது சமூகமும் சீரழிவுக்கு ஆளாகின்றது. போதையின் ஆதிக்கத்தில் 3 வாகனம் ஓட்டம்போது, விபத்தில் மாட்டும்போது தனக்கும் பிறருக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. போதையின் தாக்கத்தில் வன்செயல்களுக்கு ஆளாகும்போது, தனக்கும் மற்றவருக்கும் இழப்பு ஏற்படுகின்றது. போதையின் மிதப்பில் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, தனக்கும் பலருக்கும் பரிதவிப்பு ஏற்படுகின்றது. வளர்ந்து ஆளாகி சமுதாயத்தையும் வளர்த்து ஆளாக்கி விடுவதற்கு பதிலாக போதை தன்னையும் சமுதாயத்தையும் சேர்த்தே நிலைகுலையச் செய்கின்றது.

**ஆன்மீகத்தை அரிக்கும் போதை**

ஆன்மீகம் என்றதும் இறைவன் சார்ந்தது, சமயம் சார்ந்தது என்று பலரும் நினைக்கலாம். ஒரு நல்ல ஆன்மிகம் மனிதம் சார்ந்தது. நல்ல ஆன்மீகமே ஒரு மனிதரை மனிதராக ஆக்குகின்றது. மனிதம் என்ற ஆன்மீகத்தை புற்றுநோய் போல அரித்து விடுகின்றது. போதை சக்தியானது இளையோரின் மேலான சக்தியையும் துருபிடித்து ஆற்றலிழக்கச் செய்து விடுகின்றன. இதன் விளைவாக வாழ்வில் அர்த்தமோ, அமைதியோ, நம்பிக்கையோ இருக்காது. எதை வைத்தும் நிறைக்க முடியாத வெறுமையால் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளவும், பிறரின் உயிருக்கு உலை வைக்கவும் முனைந்திடுவர்.

**எதிர்காலக் கனவுகளைக் கலைக்கும் போதை**

அழிவு கடந்த காலத்தோடு நின்று விடுவதில்லை. நிகழ்காலத்தோடும் நின்று விடுவதில்லை. எதிர்காலத்திலும் தொடர்கின்றது.

போதை முக்காலத்தையும் முடித்து விடுகின்றது, போதைக்கு ஆளான இளையோரிடம் கனவு, இலட்சியம், குறிக்கோள், இலக்கு போன்ற மாண்புமிக்க நேர்நோக்கு விழுமியங்கள் இருப்பதற்கான வாய்ப்பில்லை. பொதுவாக இளமைப்பருவத்தில் 'சாதிக்க வேண்டும்', 'வெற்றிபெற வேண்டும்' 'முடித்துக்காட்ட வேண்டும்' என்ற வேகமும், வேட்கையும், தீர்க்கமும், தீவிரமும் இயல்பாகவே நிறைந்திருக்கும். சாதாரணமாக அவர்களும் நின்றுவிட மாட்டார்கள், அவர்களை யாரும் நிறுத்திவிடவும் முடியாது. ஆனால் போதைக்குள் மாட்டி, தவிக்கும் இளையோர் 'இன்று' மட்டமல்ல 'நாளையும்' நம்பிக்கையின்றி, தன்னியக்கமின்றி, தன்முனைப்புமின்றி, செயலூக்கமின்றி, தன்னிலைத் தெளிவின்றி, உறவுநெருக்கமின்றி, புத்துருவாக்குதலின்றி, ஒருங்கிணைந்த நிலையின்றி ஆளுமை வளர்ச்சி தடைப்பட்டு தங்களுக்கும், குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் பாரமாகத்தான் இருப்பார்கள்.


**எதிர்நோக்க வேண்டிய போதையில்லாத பாதை**

இளையோர் நல்ல ஆளுமையுடன் சிறந்த வாழ்வை வாழ வேண்டுமானால் 'போதை' அவர்களிடமிருந்து அகற்றப்பட வேண்டும். போதையோடு அவர்கள் சேர்ந்திருக்கும்போது அவர்களின் உயர்ந்த, உன்னதமான, வாழ்வின் அடித்தளங்கள் தவிடுபொடியாகின்றன. வெறும் '**எதிர்பார்ப்புடன்**' கற்பனை உலகில் சஞ்சரிப்பவர்களாக '**எதிர்நோக்கு**' இருக்கவே இருக்காது. இளமைப்பருவத்தில் போதையைத் தவிர்த்து உடலை, மனதை, உறவை, சமூகத்தை, ஆன்மிகத்தை அக்கறையோடு பராமரித்து, நேர்நோக்குப் பார்வையுடன் பயணிப்பவர்களே நலமான ஆளுமையையும், வளமான வாழ்வையும் உருவாக்க முடியும்.

**நிறைவாக**

போதையும் இளையோரும் இணைந்துபோக முடியாது. போதையும் எதிர்நோக்கும் சேர்ந்துபோக முடியாது. இளையோர் எதிர்நோக்கோடு செயல்பட வேண்டுமானால் போதையில்லாத பாதையில் பயணிக்க வேண்டும். போதை என்றாலே அழிவு, சீரழிவு, பேரழிவு, இளையோரே போதையின் பாதையை மாற்றுவோம். முடியட்டும் போதை! விடியட்டும் வாழ்வு!

## தேன் சிட்டுப் பதில்கள்



**அன்பான வாசகர்களே :**

தேன்சிட்டுப் பதில்கள் என்னும் கேள்வி - பதில் பகுதிக்கு உங்கள் கேள்விகளை புதிய தேடல் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

* கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் திருமணத்திற்காக பிரிவினை சபைகளுக்கு தாவுவது அதிகரித்து வருகிறதே?

(அமிர்தராஜ், கோணம்)

கத்தோலிக்க விசுவாசம் பந்தாடப்படுவது மகிழ்ச்சியாக இல்லீங்க.

* திருத்தந்தை பிரான்சிஸ் இந்தியா வர வாய்பிருக்கா?

(கலாராணி, மெதுகும்பல்)

அது பற்றிய தகவலறியும் அளவுக்கு வத்திக்கான் வரை எனக்கு தொடர்பு இல்லீங்க.

* தமிழக நீதிமன்றங்களில் 16 இலட்சம் வழக்குகள் தேக்கம் அடைந்துள்ளதாக பத்திரிக்கை செய்திகள் தெரிவிக்கின்றனவே?

ஆமாம். சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை மற்றும் தமிழகத்தில் உள்ள கீழமை நீதி மன்றங்களில் 15 இலட்சத்து 96 ஆயிரத்து 614 சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

* பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகிறதே?

(அஜய், கல்லுவிளை)

ஆமாம், மனித பலவீனங்களும், அறியாமையும் மனித குலத்தில் சிலரை மிருகங்களாக மாற்றிவிடுகிறது. அதிலும் குறிப்பாக வேலிகளே பயிர்களை மேய்வது வெட்கித் தலை குனிய வைக்கிறது.

* நான் ஒரு பேச்சாளராக விரும்புகின்றேன் உன் கருத்தென்ன?

(நவீன்குமார், மேல்புறம்)

பேச்சு – ஆள்பவராக விளங்குங்கள். கனியிருக்க காய் விழாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

* நாக்கு ஏன் காப்பாற்றப்படுகிறது? பல் ஏன் விழுந்துவிடுகிறது?

(ராஜதாஸ், ஆற்றூர்)

நாக்கு மென்மையாக இருப்பதால் காப்பாற்றப்படுகிறது. பல் கடினமாக இருப்பதால் விழுந்துவிடுகிறது.



# சீடத்துவ வாழ்க்கை

தமிழறிஞர். **மு. அருளப்பன்**

சீடத்துவம் என்பது தலைமைக்கு கட்டுப் பட்டு பிறருக்கு பணி செய்து வாழ்வது. அதாவது தலைமைத்துவத்தை முழுமையாக ஏற்று தான் சார்ந்த கொள்கை கோட்பாடுகளின் படி வாழ்பவனே உண்மையான சீடன்.

ஒரு துறவியின் ஆசிரமத்தில் பத்து சீடர்கள் இருந்து வந்தனர். அவர்களில் ஐந்து பேர் முதல் நிலை சீடர்கள். ஐந்து பேர் இரண்டாம் நிலை சீடர்கள். அந்த துறவி தனக்குப் பிறகு ஆசிரமத்தை வழிநடத்த நம்பிக்கைக்குரிய ஒரு சீடரை தேர்ந்தெடுத்து நியமிக்க முடிவு செய்தார். அதன்படி தனது முதன்மைச் சீடர்கள் ஐந்து பேரையும் அழைத்து அவர்களிடம் தனித்தனியாக, இரகசியமாக இவ்வாறு தெரிவித்தார்.

அன்பு சீடனே, நீ இப்படியே நடந்து சென்றால் வழியில் ஒரு சிறிய நீரோடை செல்லும். அதைக் கடந்து சென்றால் அங்கு ஒரு ஆழமான சிறிய நீரோடை செல்லும். அதைக் கடந்து சென்றால் நீர் நிறைந்த ஒரு ஆறு பாய்ந்து செல்லும். முடிந்தால் நீ அந்த ஆற்றைக் கடந்து சென்று அங்கே நிற்கும் நாவல் மரத்திலிருந்து ஐந்து நாவல் பழங்களைக் கொண்டு வரவேண்டும். ஏனென்றால் அந்த நாவல் பழங்களை நான் உண்டால் மேலும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வேன்.

அந்த நாவல் பழங்கள் உயர்ந்த மருத்துவ குணங்கள் கொண்டதாகும். துறவி ஒவ்வொரு சீடனிடமும் இரகசியமாக இப்படிக் கூறி தனித்தனியாக அனுப்பி வைத்தார். அதன்படி அந்த ஐந்து சீடர்களும் புறப்பட்டுச் சென்றனர். குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு அந்த சீடர்கள் ஆசிரமம் திரும்பினர். அவர்களை தனித்தனியாக வரவழைத்து துறவி கேட்டார்.

முதலாவது சீடன் ஆழமான ஆற்றைக் கடக்க முடியாதென செல்ல வில்லை என்று கூறினான். இரண்டாவது சீடனும், மூன்றாவது சீடனும் நீரோடையை சென்று பார்த்தபோது ஆறு தெரிந்ததாகவும், அவ்வளவு பெரிய ஆற்றைக் கடப்பது சிரமம் என திரும்பி வந்ததாகவும் தெரிவித்தனர். நான்காவது சீடன் நீரோடையைக் கடந்து சென்று பார்த்த போது ஆறு பயங்கரமாக காட்சியளித்ததாகவும், அதனால் உயிருக்குப் பயந்து திரும்பி வந்ததாகவும் தெரிவித்தான்.

ஐந்தாவது சீடர் ஒரு தேக்கு இலை பொதிந்த பொட்டலத்துடன் வந்து துறவியை வணங்கி நாவல்பழ பொட்டலத்தைக் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்ட துறவி ஆற்றை எப்படிக் கடந்து சென்றாய் என்று கேட்டார்.

அந்த சீடன், “அய்யா, நான் ஆற்றில் இறங்கி நடந்தேன். ஆற்றில் அதிக வெள்ளம் இல்லை. கால் முட்டளவே இருந்தது. நான் எந்த ஆபத்தும் இல்லாமல் மறுகரை சென்று நாவல் பழத்தைக் கொண்டு வந்துள்ளேன் என்று கூறினான்.

துறவி அந்த சீடரை தட்டிக் கொடுத்தவாறு சபாஷ் நீதான் நான் தேடிய அன்புச்சீடன். கடமை தவறாமல் செயலார்வத்துடன் செயல்பட்ட உன்னை இன்று முதல் இந்த ஆசிரமத்துக்க எனக்கு அடுத்தபடியாக தலைவராக நியமிக்கிறேன்” என பாராட்டினார்.

பின்னர் பிற சீடர்களிடம், சீடர்கள், நான் கூறியது போல் அந்த நாவல் பழம் ஆயுளை நீட்டும் அற்புத பழம் அல்ல. சாதாரண நாவல் பழம் தான். ஆறு கூட ஆழமோ, நீரோட்டமோ இல்லாதது தான். உங்களை சோதிக்கவே இப்படி கூறி அனுப்பி வைத்தேன். நான் இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் விரும்பியபடி எனக்கு கட்டுப்பட்டு, என் மனம் திருப்தியடையும்படி உண்மையாக நடக்கும் நல்ல சீடர் எனக்குக் கிடைத்துள்ளார். எனக்குப் பிறகு எனக் கூறி துறவி அந்த சீடரை ஆசீர்வதித்தார். துறவி தொடர்ந்து கூறினார். அன்பு சீடர்களே, நீங்கள் நால்வர் நான் சொன்னபடி நடக்காததால் நல்வாய்ப்பை இழந்துள்ளீர்கள். தலைமைத்துவத்தின் சொல்லைக் கேட்டு அதை நிறைவேற்ற நேர்மையுடனும், உண்மையுடனும் உழைப்பவர்களே நம்பிக்கைக்கு உரியவர்கள். நீங்கள் நால்வரும் சோம்பலாலும், துணிவின்மையாலும், உயிருக்குப் பயந்தும் கடமையைச் செய்ய தவறிவிட்டீர்கள். இனி இப்படி நடக்காதீர்கள். நடந்தது போகட்டும். நான் உங்களை மன்னிக்கிறேன். தொடர்ந்து நம்பிக்கையுடனும், துணிச்சலுடனும் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள். உங்கள் தலைமை திருப்தியடையும் வகையில் செயல்படுங்கள்.



# குருதியில் பூத்த வரலாற்று வசந்தம் குமரிமண்

அருள்பணி **ம. டேவிட் மைக்கேல்**

வான்புகழ் கொண்ட வரலாற்றுப் பெட்டகங்களை தனக்குள்ளே வைத்து தலை நிமிருகிற குமரிமண்ணின் பயணம் அலாதியானது. சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் குமரி நிலப்பரப்பில் மனித நாகரீகத்தின் தொடக்கப்புள்ளி பதிவாகியிருக்கிறது.ஏறக்குறைய கி.மு 1500க்கம் 1000 ஆவது ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கற்கால கோடரிக் கண்டுபிடிப்பு குமரியின் வரலாற்றுக்கு முந்தைய கலாச்சாரத்தை தெளிவாக்குகிறது. இதனை உறுதிச்செய்யும் வகையில் அரபிக்கடலின் கரையோரம் அமர்ந்திருக்கும் தூத்தூர் எனும் தமிழ் மண் பரப்பில் கண்டெடுக்கப்பட்ட கையால் செய்யப்பட்ட சொரசொரப்பான மண்சாடிகள் மற்றும் பழம் பொருட்கள் அவற்றின் வடிவம், ஆடை அலங்காரங்கள் ஆகியன வரலாற்றுக்கு முந்திய கற்காலத்தை பிரதிபலிக்கின்றன. இப்பகுதியில் கிடைக்கப்பெற்ற புராணங்கள் மற்றும் கலாச்சார பதிவுகள் முற்கால நாகரீக அடையாளங்களாக அறியப்படுகிற மொகஞ்சதாரோ ஹரப்பா காலங்களுக்கு இணையானதாகும். கடலடியில் கண்டெடுக்கப்பட்ட பழம் பொருட்கள் இந்த நாகரீகம் கடலரிப்பின் மூலம் முற்றிலும் அழிக்கப்பட்டதை அடையாளப்படுத்துகிறது. இன்றைய குமரி மண்பற்றிய தரவுகள் யாவும் முதன் முதலில் பொனிஷியர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி.276-ல் இங்கே வருகைதந்த எநஸ்தனிஸ் என்பவரின் குறிப்பேட்டில் இப்பகுதி கொமரி துறைமுகம் எனவும் உள்பகுதி பாண்டிய நாட்டின் பகுதியாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடல் வளைத்துக்கொண்ட குமரிக் கண்டத்தில் எச்சமாக இருக்கிற குமரி மண் கடந்த இருபது நூற்றாண்டுகளால் தமிழின் மூவேந்தர்கள் சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப்பட்டதற்கான அழுத்தமான வரலாறு உள்ளது. கி.பி.முதலாம் நூற்றாண்டின் அடையாளமான டாலமி காலத்தில் நாஞ்சில் நாடு சேரருக்கும் பாண்டியருக்கும் இடையே ஒரு தாங்கலாக, இருந்தது.

கி.பி 10-ஆம் நூற்றாண்டில் சோழர்களின் ஆளுகைக்கு கீழே வந்திருக்கிறது. 16-ம் நூற்றாண்டில் விஜய நகர பேரரசும் குமரி மண்ணை ஆண்டிருக்கிறது. மதுரை நாயக்கர்களின் ஆட்சியில் இருந்த குமரி 18 ஆம் நூற்றாண்டில் பாலமார்த்தாண்ட மன்னர்களின் அதிகாரத்தின் கீழ் வருகிறது. இடையில் ஆங்கிலேயர்கள் வந்து தங்கள் பங்கிற்கு வளைத்துக்கொண்டார்கள். திருவிதாங்கூரை ஆட்சி நடத்திய மன்னர்கள் ஆங்கிலேயருடன் உறவு வளர்த்துக் கொண்டு தங்களின் நாற்காலிகளையும் காத்துக் கொண்டனர்.

குமரி மண்ணுக்கு உரமூட்டிய பெருமை கிறிஸ்தவ மறைபரப்பாளர்களுக்கு உண்டு என்பது அதிகாரம் பூசப்படாத உண்மையாகும். சமய மூடடையோடு வந்த கிறிஸ்தவ மறைபரப்பாளர்கள் மக்களுக்கு சமூகப்பணியை மேற்கொண்டனர். கிறிஸ்துவின் ஒளியை முதல் நூற்றாண்டிலேயே இந்த மண்ணுக்கு கொண்டு வந்த திருத்தூதர் தோமா கிறிஸ்தவ மறையை இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்பே இங்கே விதைத்தார் என்பதற்கு திரவிதாங்கோட்டில் வாழும் வரலாறாக நிமிர்ந்து நிற்கும் அரப்பள்ளியே சாட்சி.

காலந்தோறும் குமரி மக்களை கடவுளின் தேவ தூதர்களாக வந்து காத்து நின்றவர்கள் மறைபரப்பாளர்கள் என்பதை மறுக்க முடியாது. வேத வெளிச்சமாக வந்து குமரி மக்களை வடுகர் படையிடம் இருந்து காத்தவர் பெருந்தந்தை என மக்களால் அழைக்கப்பட்ட சாதனைச் சரித்திரம் தூய சவேரியார் ஆவார்.

குமரி மக்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பல்வேறு சாதிக் கொடுமைகளுக்கு ஆளானார்கள். உயர்சாதிக்காரர்கள் எனக் கூறிக்கொண்ட நம்பூதிரிகள் பிறசாதியினரை இழிவாகக் கருதி தீண்டாமைக் கொடுமைகள் செய்தனர். நாடார், நாயர், ஈழவர், புலையர் உட்பட 18 சாதியினப் பெண்கள் தங்கள் மேலாடை அணிய தடை விதிக்கப்பட்டிருந்தது. சாதிப்பேரில் கொடூரம் உச்சத்தை தொட்டிருந்தது குமரி மண்ணை

உள்ளடக்கிய திருவிதாங்கூர் சமஸ்தானத்தில். ஒரு நம்பூதிரி பிராமணனுக்கு அருகில் நாடாளும் சத்திரியன் போகலாம் ஆனால் தொடக்கூடாது. நம்பூதிரியிடமிருந்து நாயர் 2 அடி தொலைவிலும் நாடார் 12 அடி தொலைவிலும் புலையர் 72 அடி தொலைவிலும் நிற்க வேண்டும் என கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

இந்த கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள் கிறித்தவத்தை ஏற்றுக்கொண்ட நாடார் இனத்தை சார்ந்த மக்கள். தங்கள் இனப் பெண்களுக்கு மார்பை மறைக்கும் தோள்சீலை அணிய உரிமை கேட்டு போராடினர். இதை தோள்சீலை போராட்டம் என வரலாறு தெரிவு செய்திருக்கிறது. கிறித்தவ மறைப்போதகரான சார்லஸ் மீட் என்பவர் தோள் சீலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளித்தனர். 37 ஆண்டுகால போராட்டத்திற்குப் பின் கிறித்தவ மறையைத் தழுவிய பெண்கள் குப்பாயம் என்னும் மேலாடை அணிய உரிமையை கிறிஸ்தவ மறைபறைப்பாளர்கள் பெற்றுத்தந்தனர். இதனால் மேல் சாதியின் கலவரம் செய்தனர். நாடார் கிறிஸ்தவர்கள் நாயர்கள் எதிர்த்துப் போராடி 1859 ஜுலை 2-ஆம் அன்று இந்து சமயத்தை சேர்ந்த நாடார் பெண்களும் மார்பை மறைத்துக்கொள்ள கிறிஸ்தவ பெண்களைப்போல் குப்பாய் அணிந்து கொள்ளலாம் எனும் உரிமையைப் பெற்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் வெள்ளையரை விரட்ட விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு நடந்த போது குமரி மண்ணையும் தமிழ் மொழியையும் காக்க இன்னொரு போராட்டம் குமரி மண்ணில் நிகழ்ந்து கொண்டிருந்தது. 1945-ல் திருவிதாங்கூர் ஆட்சியின் கீழ் உள்ள மாநிலங்களை இணைத்து கேரள மாநிலம் உருவாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி ஆட்சி மொழிகளில் ஒன்றாக இருந்த தமிழை அதிலிருந்து நீக்கினர். தமிழுக்கும் தமிழருக்கும் நேர்ந்த அவமானமாக கருதினர் குமரிமண்ணின் தமிழ் மறவர்கள்.

இக்கொடுமையை தகர்த்து தமிழ் மண்ணைக் காத்திட 1946 ஜீன் 30 -ல் குமரித்தந்தை மார்சல் நேசமணி தலைமையில் திருவாங்கூர் தமிழ் காங்கிரஸ் உருவானது. சுதந்திர இந்தியாவால் குமரிமண் திருவாங்கூருடன் இணைக்கப்பட்டது. நேசமணி தலைமையிலான போராட்டக் குழு இதனை கடுமையாக எதிர்த்த போது அன்றைய இந்திய ஒன்றியத்தின் துணை பிரதமர் படேல் மொழிவாரி மாநிலம் அமைக்கப்டும் போது குமரி மண் சென்னை மாகாணத்துடன் இணைக்கப்படும் எனும் உறுதிமொழி தந்தார். 1952-ல் சட்ட சபையில் திருவாங்கூர் தமிழ் காங்கிரஸ் தன் ஆதரவை விலக்கிக் கொள்ள ஆட்சி கவிழ்ந்தது. 1954 -ல் பொதுத் தேர்தல் நடந்த போது தமிழ் பகுதிகளில் உள்ள 12 தொகுதிகளில் திருவிதாங்கூர் தமிழ் காங்கிரஸ் வெற்றி பெற்றது. இந்த வேளையில் குமரி மண்ணை தாய் தமிழ் மண்ணோடு இணைக்க நேசமணி தலைமையில் கடுமையான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. புதுக்கடையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் தமிழ் மறவர்கள் பலர் உயிரிழந்தனர். போராட்டம் 1955-ல் உச்சத்தை அடைந்தது. தமிழரின் ஆவேசப் போராட்டத்தின் பயனாக கல்குளம், விளவங்கோடு, அகஸ்திஸ்வரம் மற்றும் தோவாளை வட்டாரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட புதிய மாவட்டத்திற்கு கன்னியாகுமரி எனும் வரலாற்றுப் பெயரைத் தந்து அன்னைத் தமிழ்நாட்டோடு குமரி மண்ணை தலைமைதாங்கி இணைத்த பெருமை குமரித் தந்தை மார்சல் நேசமணியைச் சாரும்.

குமரியை இன்று மதவெறி மண்ணாக்கி அரசியல் ஆதாயம் தேட முனையும் சனாதன சக்திகளின் மாய விலையில் வீழ்ந்து கிடக்கும் குமரி மண்ணின் குமாரர்கள் கடந்து வந்த குருதிபடிந்த வரலாற்றை படிக்க வேண்டும். நம் தமிழச்சிகளின் மாராப்புச் சேலைகளை உருவி, நம் மக்களின் உரிமையை பறித்து சாதிக் கொடுமை செய்த சனாதன சக்திகள் இப்போது தேசிய வேடம் புனைந்து மதவெறியூட்டி சான்றோர் குல மக்களை பிளந்து வைத்து அரசியல் குளிர்காய்கிறது. குமரியின் மக்கள் இன்னொரு விடுதலைப் போருக்குத் தயாராவோம். நம்மைக் கண்டாலே தீட்டு என்று ஒதுக்கி வைத்து நம்மை செருப்பணிய விடாமல், மீசை வைக்க விடாமல், நம் அன்னையர்களின் மானத்தைப் பறித்தக் கூட்டத்தை அடையாளம் காண்போம். மதவெறியால் மாய்ந்து போகும் குமரி மண்ணையும் மக்களையும் மீட்டெடுக்க மண்ணுக்குகள் துயரம் மாவீரன் மார்சல் நேசமணி மீண்டும் குமரித்தந்தையாய் எழுந்து வரவேண்டும்.



# திருமண முறியல் தடையாக இருப்பது தாம்பத்திய உறவு கொள்ளும் ஆற்றலின்மை

அருள்முனைவர். ஞா. ஆரோக்கிய ஜோஸ் DCL

திருமணத்திற்கு முந்தைய மற்றும் நிரந்தரமான பாலுறவு கொள்ளும் ஆற்றலின்மை, அது ஆண் தரப்பில் இருப்பினும் அல்லது பெண் தரப்பில் இருப்பினும், அது முழுமையாக இருப்பினும் அல்லது சார்பு நிலையாக இருப்பினும், தன் இயல்பிலேயே திருமணத்தைச் செல்லாததாக்கிவிடுகிறது. ஒருவர் உடலில் வேறு யாருடனும் பாலுறவு கொள்ள முடியாது என்றால், அவரின் புணரும் ஆற்றலின்மை தனி முதல்நிலை பாலுறவு ஆற்றலின்மை (Absolute Impotency) ஒருவர் தான் மணந்து கொண்ட ஒரு குறிப்பிட்ட நபருடன் மட்டும் பாலுறவு கொள்ள முடியாது என்றால், அவரின் புணரும் ஆற்றலின்மை சார்புநிலை பாலுறவு ஆற்றலின்மை (Relative Importency). பாலுறவு கொள்ளும் ஆற்றலின்மை உடல்ரீதியான அல்லது மனரீதியான காரணங்களால் அமையலாம். ஒருவர் உடலளவில் எந்த கறையும் இல்லாதவராக இருப்பர். ஆனால் மனதளவில் ஒரு சில காரணங்களால் பாதிக்கப்பட்டு பாலுறவு கொள்ளும் ஆற்றலை இழந்திருப்பார். மனரீதியாக பாதிக்கப்பட்டு பாலுறவு கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களும் செல்லத்தக்க திருமணம் செய்ய முடியாது. இப்படிப்பட்டவர்கள் திருமணத்திற்கு முன்பே மருத்துவ ஆலோசனை பெற்று தகுந்த சிகிச்சை எடுத்துக்கொண்டால் தமது குறையை நிவர்த்தி செய்து கொள்ள முடியும். பாலுறவு கொள்ளும் ஆற்றல் அற்றவர்கள் திருமணம் செய்யும் தகுதியை இழந்து விடுகிறார்கள். இயற்கையே இவர்களைத் தகுதி நீக்கம் செய்துவிடுகிறது. இது இயற்கைச் சட்டத்தால் எழுகின்ற திருமண தடை என்பதால் இத்தடைக்கு யாரும் விதிவிலக்கீடு அளிக்க முடியாது. நோய் அல்லது விபத்துக் காரணமாக பாலுறவு கொள்ளும் ஆற்றலின்மை திருமணத்திற்குப்பின் ஏற்பட்டால், அந்த திருமணத்தை செல்லாத்திருமணமாக அறிவிக்க இயலாது. திருமணத்திற்குப்பின் முறியல் தடையாக இருப்பது முந்தைய திருமணப் பிணைப்பு (1085). நமது கத்தோலிக்கத் திருஅவை ஒருதரமாக வலியுறுத்தி வருகிறது. எனவே ஒரு ஆணும் பெண்ணும் சுதந்திரமாக அளிக்கும் சம்மதத்தின் மூலம் திருமண வாழ்வை உருவாகிகுகின்றனர். எனவேதான் திருமணத்தடைகள் எதுவும் இல்லாமல் முறையாக நடைபெறும் திருமணத்தில் மணமக்களிடையே ஓர் இருக்கமான பிணைப்பு எழுகிறது.

இப்பிணைப்பு தன்னியல்பிலேயே நிரந்தரமானது. மனிதர் எவராலும் பிரிக்கப்பட முடியாதது. (1134). மேலும், திருமணம் புரிந்து கொண்ட பின்பு அவருடைய திருமணம் தாம்பத்திய உறவால் முழுமையடையவில்லை என்றாலும் அவர் மறுமணம் புரிய முடியாது. இன்னும் ஒன்றை மனதில் ஆழமாக பதித்து வைத்துக்கொள்ளல் வேண்டும். முதல் திருமணப்பிணைப்பு இரண்டாவது திருமணத்திற்கு ஒரே தடை என்பது இறைவனின் திட்டம். திருஅவையின் சட்டமில்லை. இயேசுவே இதைப்பற்றி தெளிவாக எடுத்தியம்பியிருக்கின்றார். இனி அவர்கள் இருவர் அல்லர் ஒரே உடல். ஆகவே, கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் (மத். 19:6). தன் மனைவியை விலக்கிவிட்டு வேறொரு பெண்ணை மணக்கும் எவரும் விபச்சாரம் செய்கின்றான் என்று கூறுவது கடவுள் திருமணத்தின் ஒருமைத்தன்மையை ஒவ்வொருவரும் புரிந்து அதைக் காக்க முன்வரவேண்டும் என்பதை தெளிவாக எடுத்தியம்புகின்றார். (மாற்கு 10: 11-12). இதைப் படிக்கும்போது அப்படியென்றால் ஒருவர் ஒருமுறை திருமணம் செய்துகொண்டபிறகு அந்த திருமண வாழ்விலிருந்து

தன்னைத்தானே விடுவித்துக்கொள்ள முடியாதா? ஒருமுறை திருமணம் செய்து கொண்டவர்கள் அத்திருமண வாழ்விலிருந்து தப்பவே முடியாதா? என்பது போன்ற கேள்விகள் எழலாம். இதற்கு திருமணத்தின் செல்லாநிலையும், திருமணப் பிணைப்பு அவிழ்க்கப்படுவதும் சட்டரீதியாகவும் நிச்சயமாகவும் எண்பிக்கப்பட வேண்டும்.

மட்டுமல்ல கணவர் அல்லது மனைவி இறந்து விட்டால் மறுமணம் செய்யலாமா? என்ற கேள்விக்கு திரு அவை மிகத்தெளிவாகப் பதில் சொல்கிறது. திரு அவைச்சட்ட எண் 1141: உறுதிப்படுத்தப்பட்டதும் தாம்பத்திய உறவால் முழுமைப் பெற்றதுமான ஒரு திருமணம் சாவைத்தவிர, எந்தவொரு மனித சக்தியாலும் அல்லது எந்தவொரு காரணத்தாலும் அவிழ்க்கப்பட முடியாது. எனவே ஒருவரின் இறப்பு மட்டுமே திருமணப் பிணைப்பை இயற்கையாகவே அவிழ்க்கக்கூடியதாக இருக்கிறது. தனது கணவர் அல்லது மனைவி இறந்தபிறகு ஒருவர் வேறு திருமணம் செய்யத் தடை இல்லை. ஆனாலும் வேறு திருமணம் செய்வதற்கு முன்னர் முதல் கணவர் அல்லது மனைவியின் இறப்புச் சான்றிதழைப் பெற்று பங்கு அருட்பணியாளரிடம் கொடுக்க வேண்டும்.

அடுத்த இதழ் **(புதிதாய் பிறப்போம்)** என்றச் சிந்தனையில் மலர இருக்கின்றது. உங்களது படைப்புகள், கவிதை, கட்டுரை, கதை, துணுக்குகள், சிந்தனைகளை 30-11-2024-ம் தேதிக்குள் புதிய தேடல் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். சிறந்தப் படைப்புகள் இதழில் வெளியிடப்படும்.

உங்கள் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றது.

**ஆசிரியர்**
**புதிய தேடல்**



# திருவிவிலியம் கூறும் தூய்மை

**அருள்பணி. வ. இரபேல்**

தூய்மை அல்லது புனிதம் என்பது எபிரேயத்தில் பொதுவானவற்றிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்ட சிறப்புநிலையைக் குறிப்பதாகும். அதேநேரம். எபிரேயத்திலும் சரி, கிரேக்கத்திலும் சரி, அது கடவுளுடன் தொடர்பு கொண்ட ஒரு நிலையையும் குறிக்கிறது இவ்வாறு, கடவுள் தூயவராக இருக்கிறார். மனிதர், கடவுளுடன் உள்ள தொடர்பாலும் உறவாலும் தூயவராக இருக்கின்றனர். பொருள்களும் செயல்களும் அவ்வாறே ஆகின்றன.

**பழைய ஏற்பாட்டில்**

பழைய ஏற்பாட்டைப் பொறுத்தவரை கடவுளே மிக மேலான தூயவர் (விப 15:11) திருப்பாடல்களும் எசாயா அழைப்புப் பெறும் காட்சியிலும், கோவிலில் சேராபீன்கள் ஆண்டவரை தூயவர், தூயவர், தூயவர் என அழைக்கின்றன (எசா 6:3). கடவுள் தோன்றும் இடங்களும் அவரை வழிபடும் இடங்களும் புனிதமானவையாகக் கருதப்படுகின்றன. ஆண்டவர் மோசேக்கு முட்புதர் நடுவே தோன்றி உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு ஏனெனில் நீ நின்றுகொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம் என்றார் (விப 35). எருசலேமில் இருந்த கோவில் மிகவும் புனிதமான இடமாகும். ஏனெனில் கடவுளின் உடனிருப்பு அங்கே இருந்தது (1 அர 8:10:11), கோவிலில் பயன்படுத்தப்பட்ட பொருள்களும் புனிதமானவையாகக் கருதப்பட்டன.

கடவுள் மட்டுமல்ல கடவுளை வழிபடும் இடங்கள் மட்டுமல்ல இஸ்ரயேல் இனமே தூய இனமாக இருக்கிறது (இச.7:6). இஸ்ரயேலின் புனிதம் என்பது அது கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதிலும், பாவத்தைத் தவிர்ப்பதிலும் அடங்கியிருக்கிறது. தூய்மையை முன்னிட்டு

மக்களும் தூயோராய் இருக்குமாறு பணிக்கின்றது. நீங்கள் தூயோராய் இருங்கள் ஏனெனில் உங்கள் கடவுளும் ஆண்டவருமாகிய நான் தூயவராய் இருக்கிறேன் (லேவி 19:2).

கோவிலும் அதில் பலியிடப்படும் உணவுப்பொருளும் புனிதமானவையாக இருப்பதுபோல், மக்களும் புனிதமானவர்கள் என்னும் கருத்தைப் பிற்காலப் பரிசேயர்களும் யூத ரபிகளும் பரப்பினார்கள். மக்கள் உண்பதிலும், பாலியல் வாழ்விலும், திருவிழாக்களைக் கொண்டாடுவதிலும் சடங்குப்பூர்வத் தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

**புதிய ஏற்பாட்டில்**

தூய்மைகுறித்து யூதச் சமயத்தில் காணப்படும் கருத்துகளைப் புதிய ஏற்பாடு உறுதிசெய்கிறது. கடவுளும் தூயவராய் இருக்கிறார். கோவிலும் சட்டமும் தூயனவாய் உள்ளன. கற்களால் கட்டப்பட்ட கோவிலின் முக்கியத்துவம் புதிய ஏற்பாட்டில் மாறிப்போனது. ஏனெனில், பிறவினத்துக் கிறிஸ்தவர்கள் எருசலேம் கோவில் வழிபாட்டினின்று விலகிப் போய்விட்டார்கள். கிபி. 70 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எருசலேம் கோவிலும் இல்லாமல் போய்விட்டது. ஆனால், கிறிஸ்தவத் தூய்மைக்கு உருவகமாகக் கோவில் பயன்படுத்தப்பட்டது. ஒருவர் கடவுளின் கோவிலை அழித்தால், கடவுள் அவரை அழித்துவிடுவார். ஏனெனில் கடவுளின் கோவில் தூயது; நீங்களே அக்கோவில் (1 கொரி 3:17). இயேசு கடவுளை தூய தந்தையே என அழைக்கிறார் (யோவா 17:11). கடவுள் விண்ணக அரியணையில் வீற்றிருக்க தூயவர், தூயவர், தூயவர் என எசாயா நூலில் போற்றப்பெறுவதுபோல் போற்றப்பெறுகின்றார் (திவெ. 4:6-10). இயேசு கற்றுத்தரும் இறைவேண்டலில், தந்தையாம் கடவுளின் பெயர் தூயதெனப் போற்றப்பெறுகின்றது. இயேசு கிறிஸ்து தந்தையுடன் கொண்டுள்ள நெருக்கமான உறவால், தூயவர் எனப் பல இடங்களில் அழைக்கப்படுகின்றார். தீய ஆவி ஒன்று இயேசுவை, நீர் கடவுளின் தூயவர் எனக் குறிப்பிடுகிறது (மாற் 1:24). பேதுருவும் இயேசுவைப் பார்த்து, நீரே கடவுளின், தூயவர் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம் என்கிறார் (யோவா 6:69). அன்னை மரியாவிடம் பேசும் கபிரியேல் தூதர், தூய ஆவியாலும் கடவுளின் வல்லமையாலும், பிறக்கப்போகும் குழந்தை தூயதாக இருக்கும் என்கிறார் (லூக் 1:35)

பழைய ஏற்பாட்டின் இஸ்ரயேல் போல புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவச் சமூகமும் தூயதாகும். பவுலடியார் தாம் உருவாக்கிய கிறிஸ்தவச் சமூகங்களின் உறுப்பினர்களைப் புனிதர்கள் என்றே குறிப்பிடுகிறார். அது தமிழில் இறைமக்கள் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (உரோ 1:7, 1கொரி 1:20) ஏனெனில், இறைமக்களின் அடிப்படைத் தன்மை அதுதான். நம்பிக்கையாளர்கள் ஒருவரையொருவர் தூய்மைப்படுத்துகின்றனர் எனப் பவுலடியார் கூறுகிறார். நம்பிக்கை கொள்ளாத கணவர், நம்பிக்கை கொண்ட தம் மனைவியால் தூயவராகிறார். (1கொரி 7:14) பழைய ஏற்பாட்டின் வழிநின்று, இறைமக்களைத் தூய மக்களினத்தினர் எனப் பேதுரு கறிப்பிடுகிறார். (1 பேது 2;29) மேற்கோளுடன் பேதுரு அறிவுறுத்துகிறார். உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் உங்கள் நடத்தையெலல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள். நீங்கள் தூயோராயிருங்கள்: ஏனெனில், நான் தூயவர் என எழுதப்பட்டிருக்கிறது (1 பேது 1:15-16), பவுலடியார் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில், கிறிஸ்தவச் சமூகத்தைத் தூய கோவிலாக வருணிக்கின்றார் (எபே 2:19-22)

மொத்தத்தில் கிறிஸ்தவ வாழ்வுமுறை என்பது கடவுளிடமிருந்து வருவதால், அது தூய்மையானதாக இருக்கிறது. இதனால், கிறிஸ்தவச் சமூகம் பாவத்தையும் தீமையையும் விட்டுவிட வேண்டும். கடவுளுடன் இணைந்து வாழும் நிலையை எதற்காகவும் விட்டுக் கொடுத்தல் ஆகாது.

## இயற்கைக் காட்டும் வழியில் தைராய்டை பேணுவோம்

Dr. **ஏஞ்சலின் ஆஷா** BNYS,
CHDP சுங்கான்கடை

தைராய்டு என்பது நம் உடலில் முன் கழுத்துப் பகுதியில் பட்டாம்பூச்சி (Butterfly) வடிவில் காணப்படும் நாளமில்லா சுரப்பியாகும். இது நம் உடலில் வளர்சிதை மாற்றத்தை சீராக வைப்பதற்கு உதவுகிறது. இதன் செயல்பாட்டில் ஏற்படும் மாறுபாட்டால் ஹைபோதைராட்டிஸம் மற்றும் ஹைபர்தைராடிஸம் என்னும் இரு முக்கிய பிரச்சினைகள் உருவாகின்றன.

இது அல்லாமல் காய்டர், தைராய்டு கட்டிகள், புற்றுநோய் கட்டிகள், தைராய்டில் ஏற்படும். தொற்று (infection auto unmune diseases) போன்ற நோய்களும், தைராய்டு மற்றும் அதன் செயல்பாட்டை பாதிக்கின்றது

இன்றைய கால சூழலில் தைராய்டில் ஏற்படும் நோய்கள் என்பது உலகளாவிய ஒரு பிரச்சனையாகவே பார்க்கப்படுகின்றது. இதன் பாதிப்பு ஆண் பெண் இருபாலாருக்கும் இருந்தாலும் பெண்களுக்கு குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கு இதன் பாதிப்பு என்பது மிக முக்கியமானதாகவும், சிசுவின் வளர்ச்சியை பாதிக்கும் ஒரு காரணியாகவும் அமைகின்றது.

**தைராய்டு உற்பத்தியும் செயல்படும் முறையும்:**

நம் தைராய்டு T3, T4 மற்றும் calcitonin என்னும் சுரப்பிகளை சுரக்கின்றது. நம் மூளையின் அருகில் இருக்கும் பிட்யூட்பா என்னும் சுரப்பியில் இருந்து TSH (thyroid stimulating hormone) சுரக்கப்படுகிறது. இந்த ஹார்மோன் தான் தைராய்டு சுரப்பியை தூண்டி போன்ற ஹார்மோன்கள் சுரக்க காரணமாயுள்ளது.

**ஹைபோ மற்றும் ஹைபர் தைராய்டின் நோய் காரணங்கள், அறிகுறிகள், கட்டுப்படுத்தும் முறைகள்.**

**I. ஹைபோதைராட்டிஸம்** (Hypothyroidism)

**காரணங்கள்**

இந்த நிலையில் TSH இரத்தத்தில் அதிகம் காணப்படும். ஆனால் T3, T4 சீராகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்

**அறிகுறிகள்**

சோர்வு, குளிர்தாங்கும் தன்மை குறைதல், சருமத்தில் எண்ணைய் தன்மை குறைதல், தோல் வறட்சி, எடை அதிகரித்தல், அதிக தூக்கம், மன அழுத்தம், மலச்சிக்கல்,

**II. ஹைபர்தைராடிஸம்** (Hyperthyroidism)

**காரணங்கள்**

இந்த நிலையில் TSH குறைவாக இருக்கும் எனவே T3, T4 சீராகவோ அல்லது குறைவாகவோ இருக்கலாம்.

**அறிகுறிகள்**

சோர்வு,அதிக வியர்வை, படப்படப்பு, கைநடுக்கம், தூக்கம் குறைவு, சருமம் மெலிதல், அதிக முடி உதிர்தல், அடிக்கடி மலம் கழித்தல், எடை குறைதல்.

TSH அதிகம் இரத்தத்தில் காணப்பட்டால் (Hypothyroid) எனவும் TSH குறைவாக இரத்தத்தில் காணப்படுவதை (Hyperthyroid) எனவும் வகைப்படுத்தலாம்.

ஹைபோ மற்றும் ஹைப்பர் தைராயடிஸத்திற்கான உணவியல் முறைகள் யோகா பயிற்சிகள், வாழ்வியல் மாற்றத்திற்கான முக்கியத்துவத்தை தொடர்ச்சியாக அடுத்த இதழில் காண்போம்....

### சிந்தனை துளிகள்

**ஒவ்வொரு குழந்தைக்கும் தன் வாழ்க்கையை முழுமையாக வாழுகிற புத்திசாலித்தனம் இயல்பாகவே இருப்பதால், உங்கள் மனதில் இருக்கின்ற அழுத்தங்களை எல்லாம் குழந்தையின் மனதில் திணிக்காதீர்கள**



# குமரி மாவட்டத்தின் இன்றைய தேவை

அருட்பணி. **லா. அலோசியஸ்**

**முன்னுரை**

இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி, எண்ணம், கருத்து வெளிப்படுத்துதல், பக்தி சமய நம்பிக்கை வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், தகுதி மற்றும் வாய்ப்பில் சமத்துவம் கிடைக்கவும் மக்களிடையே தனி மனித மாண்பையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதி செய்யும் வண்ணம் சகோரத்துவத்தை வளர்க்கவும் நடைமுறைப்படுத்துகிறோம். (இந்திய அரசியலமைப்பின் முகவுரை)

கன்னியாகுமரி மாவட்டம் இந்தியாவின் தென் முனையில் அமைந்துள்ள ஒரு அழகிய மாவட்டம். இம்மாவட்டம் பல்வேறு தளங்களில் சிறப்பு வாய்ந்த இடமாக உள்ளது. புவியியல் ரீதியாக ஆசீர்வதிக்கப்பட்ட இடம் வரலாற்று பெருமை வாய்ந்த இடம். கலைகள் மற்றும் பண்பாட்டிற்கு பெயர் பெற்ற இடம். கல்வியறிவில் சிறந்தோங்கும் மாவட்டம் என பற்பல பெருமைகளும் இதற்கு உண்டு. மனித மேம்பாடு, கல்வியறிவு, விவசாயம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட காரணிகளை ஆய்வு செய்தால் தமிழ்நாட்டின் சிறந்த மாவட்டமாக கன்னியாகுமரி உள்ளது. தமிழ் நாட்டின் பணக்கார மாவட்டமும் இதுவே.

உரோம் நகரம் ஒரே நாளில் கட்டிமுடிக்கப்படவில்லை என்று சொல்வது போன்று கன்னியாகுமரி மாவட்டமும் இந்நிலையை ஒரே நாளில் வந்தடையவில்லை. இந்த உயரத்தை நாம் அடைவதற்கு நம் முன்னோர்களின் திட்டமிடுதலும், ஒருங்கிணைந்த வாழ்வியல் போராட்டமும் தேவைப்பட்டது. ஒரு சமூகத்தின் வளர்ச்சியும், வலிமையும் அதன் தொடர் முயற்சி மற்றும் போராட்டத்தின் மூலமே கிடைக்கப்படுகிறது என்று நெப்போலியன் ஹில் சொல்வது போன்று கன்னியாகுமரி மாவட்டமும் வளர்ச்சியடைய, வலிமையடைய தொடர் முயற்சியும் போராட்டமும் இன்றைய கட்டாயத் தேவையாக இருக்கிறது.

**இன்றைய தேவை**

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனது முகவுரையில் இந்திய மக்களின் தேவை என்ன? என்பதை பின்வருமாறு வரையறை செய்துள்ளது. இந்திய குடிமக்கள் அனைவருக்கும் சமூக, பொருளாதார, அரசியல் நீதி, எண்ணம், கருத்து வெளிப்படுத்துதல், பக்தி, சமயநம்பிக்கை, வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், தகுதி மற்றும் வாய்ப்பில் சமத்துவம் கிடைக்கவும் மக்களிடையே தனிமனித மாண்பையும் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உறுதி செய்யும் வண்ணம் சகோதரத்துவத்தையும வளர்க்கவும் நடைமுறைப்படுத்துகிறோம். இவற்றை கன்னியாகுமரி மாவட்டம் முழுமையாய் அனைத்து மக்களுக்கும் உறுதிப்படுத்துவதே இன்றைய தேவையாக இருக்கிறது.

**இன்றைய நிலை**

மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி, இறையாண்மையை கொன்ற அரசியல், வேலை செய்யாமல் செல்வம். சகோதரத்துவம் இல்லாத வழிபாடு, நேர்மையை மறந்த பொருளாதாரம், மனிதாபிமானத்தை ஒதுக்கிய அறிவியல், ஒழுக்கத்தை ஒதுக்கிய கல்வி போன்றவை எல்லாத் துறைகளிலும் ஊடுருவி விட்டதால் நமது கன்னியாகுமரி மாவட்டம் அதிவேகமாக சிதைந்து கொண்டிருக்கிறது. என்பதை நாம் மறுத்துவிட முடியாது.

இதற்கு மேற்குத்தொடர்ச்சி மலைகளை உடைத்து கனிமவளச் சுரண்டல், அரியவகை மணல் எடுப்பதற்கான முயற்சி, புதைகுழிகளாகிக் கிடக்கும் சாலைகள், அதிகாரிகளின் அலட்சியப்போக்கு, மாணவர்களிடையே அதிகரிக்கும் போதைப்பழக்கவழக்கங்கள், நீதிமன்றங்களில் குவியும் குடும்ப வன்முறை, விவாகரத்து தாக்கல்கள், கல்வியின் தரத்தில் குறைபாடு, இளையோரிடமிருக்கும் ஆன்லைன் அடிமைத்தனம், புலம்பெயர்தல், அதிகரிக்கும் வட இந்தியர்களின் படையெடுப்பும் ஆக்கிரமிப்பும், அரசியல் ஆதாயத்திற்காக மதநல்லிணக்கத்தில் ஏற்படுத்தப்படும் விரிசல்கள் என பலவற்றை நாம் சுட்டிக்காட்டலாம். இக்குறைகளை களைந்து நமது குமரி மாவட்டத்தை தலைசிறந்த மாவட்டமாக கட்டியெழுப்ப மீண்டும் பன்முகத் திட்டமிடுதலும்,ஒருங்கிணைந்த செயல்பாடும் உடனடித் தேவையாக இருக்கிறது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பும் – சுற்றுலாத்துறை மேம்பாடும்**

இயற்கை வளங்களைக் காப்பாற்றிட சுயநலமற்ற அரசியல் முன்னெடுப்புத் தேவை. கன்னியாகுமரியின் மலைப்பகுதிகளை பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவித்து அவ்விடங்களில் இயற்கை எழில் பொங்கும் சுற்றுலாத்தளங்களை அமைக்கும் போது இயற்கையோடு பொருளாதாரமும் முன்னேற்றம் பெறும். கடற்கரை பகுதிகளில் பெட்டக துறைமுகம் மற்றும் அரியவகை மண் அள்ளுதல் போன்ற திட்டங்களை கைவிட்டு மீன்பிடி சார் பொருளாதாரத்தை முன்னெடுக்கும் போது மக்கள் வளமும் பொருளாதார வளமும் பெருகும்.

**தொழிற்சாலைகள் மற்றும் வேலைவாய்ப்பு**

இரப்பர் தொழிற்சாலை, தேன் ஆராய்ச்சிக் கழகம், மீன்பிடி துறைமுகம், வேளாண்சார் நிறுவனங்கள் ஆகியவை இம்மண்ணின் விளைச்சலோடு தொடர்புடையவை. இவற்றை உருவாக்குவதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் இன்னும் மேம்படும். இவற்றோடு காற்றாற்றல், சூரிய ஆற்றல் மற்றும் நீர்வழி மின்சாரம் தயாரிப்பதில் நவீன முறையை புகுத்தி திட்டங்களை செயல்படுத்தினால் இன்னும் நம் மாவட்டம் வளர்ச்சியடையும்.

**கல்வி மற்றும் பயிற்சி**

கல்வி நிறுவனங்கள் தனிமனித ஒழுக்கத்தை கற்றுத்தரும் இடமாக மாற்றமடைய வேண்டும். அத்தோடு தொழில் முனைவோர் பயிற்சிகள், தொழில்நுட்ப கல்வி மற்றும் நவீன தொழில் சார்ந்த படிப்புகள் ஆகியவற்றை ஊக்குவித்து இளைஞர்களின் திறமைகளை மேம்படுத்திட வேண்டும்.

**சமய நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம்**

நமது குமரி மாவட்டத்தின் மக்களின் ஆன்மீக வளர்ச்சியில் தனிமனித சுதந்திரம் பேணப்படுதல் வேண்டும். மேலும் ஆன்மீகம் என்பது சமுதாய ஒற்றுமையை வளர்ப்பதற்கும், பல்சமய உரையாடல்களை ஊக்குவிப்பதற்கும், அமைதியான சூழலில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவும் கருவிகளாக மாறிடல் வேண்டும்.

**முடிவுரை**

இவ்வாறு பன்முகச் சிறப்புக் கொண்ட நமது கன்னியாக்குமரி மாவட்டம் தற்போது பலவிதக் காரணங்களால் தனது தனித்தன்மையை இழந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரியதே. எனவே நமது கன்னியாகுமரி மண்ணோடு சேர்ந்து நாமும் சுரண்டப்படுகிறோம். நவீன அடிமைகளாக்கப்படுகிறோம். என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அதோடு ஆறு அழுக்காக இருக்கிறது என்று ஆற்றங்கரையில் நின்று புலம்பிவிட்டு செல்பவர்களாக இல்லாமல். ஆற்றில் இறங்கி தூய்மை செய்யும் செயல்பாட்டாளர்களாய் ஒவ்வொரு குமரி மக்களும் மாறுவதே இன்றைய குமரியின் அவசரத் தேவை.



# இணைந்து மகிழ்ந்து கொண்டாடத் திருப்பலி

அருட்பணி. **ம. காட்வின் சவுந்தர் ராஜ்**

திருப்பலி என்பது புனித வெள்ளி நிகழ்வை புனித வியாழன் வார்த்தைகளில் கொண்டாடுவதே ஆகும். புனித வெள்ளியன்று இயேசு கிறிஸ்து எதை தன் உடலால் செய்தாரோ அதையே புனித வியாழன் அப்ப இரச அடையாளங்களில் புனித வியாழனன்று செய்தார். பொதுவாக, ஏற்கெனவே நடந்த ஒன்றை அடையாளங்களால் நினைவு கூர்வது மனித இயல்பு. ஆனால், இறை மகன் இயேசு பின்னர் நடக்கப்போவது என்னவென்று அறிந்து அதனை ஏற்கெனவே முன் கூட்டியே அதை அடையாளங்களால் தன் சீடர்களோடு கொண்டாடினார். அதை எல்லாக் காலமும் எல்லா மனிதரும் நினைவு கூர்ந்து கொண்டாட வேண்டுமென்பதற்காக, இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்று பணித்தார். இப்படிப்பினையை நினைவு கூர்ந்து நாம் கொண்டாடுவதே திருப்பலி நற்கருணை கொண்டாட்டம் ஆகும். இத்திருப்பலியை பல்வேறு பெயர்களில் நம் திரு அவையின் பாரம்பரியம் அழைக்கின்றது. இப்பெயர்கள் உணர்த்தும் பொருள் வழியாக திருப்பலியின் உண்மை உணர்ந்து நம்பிக்கையில் ஆழப்படுவோம் என்றும் இணைந்து மகிழ்ந்து திருப்பலியைக் கொண்டாடுவோம்.

**1. திருப்பலி**

திரு என்பது ஒன்றை அல்லது ஒருவரை மாண்புறச் செய்யும் சொல்லாடலாகும். பலி என்பது கடவுளுக்கு நன்றி செலுத்தவும், குற்றங்களை ஏற்றுக்கொண்டு அவரோடு ஒப்புரவாக முயற்சிக்கும் செயலாகும். பல்வேறு விலங்கு மற்றும் பறவைகளின் பலிக்குப் பதிலாக நம்மீது கொண்ட அன்பால் தன்னையே கையளித்த இயேசுவின் தற்கையளிப்பை கொண்டாடுவதே திருப்பலி ஆகும்.

(தொநூல் 4: 4 ; 1 யோவா 4:10)

**2. தியாகப் பலி**

தியாகம் என்றால் பிறிதொருவருக்காக இழத்தல், கைவிடல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. எனவே, மானிடர் நமக்காக இயேசு தன்னையே இழந்த, மற்றும் உயிரையே துறந்த அன்பு மிகு தியாகத்தை நினைவு கூர்வதனால் தியாகப்பலி என்றழைக்கப்படுகிறது.

(எபி 13:15)

**3. நற்கருணை**

உண்மையில் Eucharist என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் நன்றி செலுத்துதல் ஆகும். இச்சொல்லின் தழிழாக்கமே நற்கருணை ஆகும். நல் + கருணை = நற்கருணை ஆகும். கருணை என்பது தாராள மனம் அல்லது பெரிய மனம் ஆகும். மிகச் சிறியோராகிய நம்மீது மிகுந்த அக்கறைக் கொண்ட இயேசுவின் பெரிய மனதை நினைத்து நாம் கடவுளுக்கு நன்றிக் கூறுவதால் நற்கருணை என்றழைக்கிறோம்.

(உரோ 5: 7,8)

**4. பூசை**

வழக்கு மொழியில் பூசை என்றே பெரும்பாலும் அழைக்கப்படும் நற்கருணைக் கொண்டாட்டம் நாம் நம்மை இறைவனோடு இணக்கமாக வைத்திருக்கவும், அதன் மூலம் வாழ்வின் தடைகளை கடந்து ஆன்மீக ஏற்றம் பெறவும் செய்யும் செயல் என பொருள்படுகிறது. பூசை என்பது ஆணவம் கடந்து இறை ஞானம் அடைய தூண்டும் செயலாததால் முழுமைப் படுத்துதல் என்னும் பொருளில் வைத்து நாம் நற்கருணைக் கொண்டாட்டத்தில் முழுமை நிறைவு பெறுகிறோம் என பொருள் உணர்த்தி நிற்கிறது. நம்மை முழுமையாக்குவது இயேசுவின் கல்வாரி பலியே.

**5. மாஸ், Mass, Missa**

மாஸ் என்று பரவலாக அறியப்படும் திருப்பலியின் பொருள் Service சேவை என்னும் பொருளில் வருகிறது. எனவே, இறைவேண்டலும் பொது நலனும் கிறிஸ்துவை பின்பற்றுவோரின் இரு கண்கள் என்னும் உயர் நோக்கத்தை குறித்துக் காட்டுகிறது. இந்நோக்கத்தை வாழ்வாக்க அழைக்கிறது.

மேலும் அப்பம் பிடுதல் அதாவது பகிர்தல், இறுதி இராவுணவு, ஆண்டவரின் திருமண விருந்து என்றும் பல்வேறு வார்த்தைகளில் அழைக்கப்படும் திருப்பலி நம்மை இயேசுவின் தியாக பலி வழியாக கடவுளோடு ஒன்றிக்க வைக்கிறது. எனவே, திருப்பலியைப் பொறுத்தமட்டில் இது நமக்கு இயேசு வழங்கிய புதையல் ஆகும். நம்முடைய புரிதலின் படி ஒருவரிடம் புதையல் இருந்தால் அவருடைய உள்ளமும் எண்ணமும் அதைச் சுற்றியே நீக்கமற இணைந்திருக்கும். திருப்பலி கடவுள் தன் ஒரே மகன் வழியாக நமக்கு வழங்கிய சிறப்புப் புதையல். எனவே, ஒவ்வொரு விசுவாசியின் உள்ளமும் எண்ணமும் திருப்பலியில் இரண்டறக் கலந்திருக்க வேண்டும்.

நிறைவாக திருப்பலி என்பது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின், பிறப்பு, பணி வாழ்வு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு,விண்ணேற்றம் மற்றும் கடவுளின் வலது பக்கம் வீற்றிருத்தல் ஆகியவற்றின் நினைவுக் கொண்டாட்டம் (occ1330). திருப்பலியை பொருளுணர்ந்து கொண்டாடும் யாவரும் இம் மறைநிகழ்வுகளின் பங்கேற்பாளர்களாக மாறுகின்றோம். எனவே, நம் யாவரையும் இயேசு வழியாக கடவுளோடு இணைக்கும் இத்தெய்வீக பலியை இணைந்து மகிழ்ந்து கொண்டாடுவோம். இவ்வகை மகிழ்வை பிறருக்கு அறிவித்து இயேசுவின் உண்மைச் சீடராய் வாழ்வோம்

## வெற்றிக்கான ஐந்து படிகள்



**முதல் படி — வாசல் படி,**

ஒழுக்கமும், உயர்வும் வாசல்படியில் துவங்குகிறது. வீட்டு வாசல்படியிலிருந்து வெளியே வருகிற போது வீட்டின் நினைவுகளைக் கழற்றி விடுவதும், நுழையும் போது வெளி உலகத்தைத் துண்டித்து விடுவதுமே பணியில் நம்மைக் கரைத்துக் கொள்ள உதவும். குடும்ப உறவை வளப்படுத்தச் செய்யும்.

**இரண்டாவது படி — தள்ளுபடி**

கோபத்தையும் அடுத்தவர்கள் மீது தோன்றும் வெறுப்பையும் அவ்வப்போது தள்ளுபடி செய்து, மனத்தை வெற்றுப் பலகையாக வைத்திருப்பது தான். வாழ்வு அமைதியாகும், மேன்மையாகும்.

**மூன்றாவது படி — மறுபடி**

பிறருக்கு செய்த நல்லவற்றை மறுபடி அசைபோடுவது, நன்றியுணர்வை எதிர்பார்ப்பது, அனாவசியம் என்றுணர்ந்த போது, எந்தச் சுமையும் இல்லாமல் கனமின்றி காற்றில் இறகுகளை விரிக்க முடியும்.

**நான்காவது படி — படி...படி...**

மனம் தேடி அலைய வேண்டியது விரிந்த புத்தகத்திற்காகத் தான். புத்தகங்கள் விழுதானால் தான் ஆலமரமாய் வாழ்வு விரிவடையும், உயர்வடையும். படிப்பே என்னை நம்பிக்கையுடன் திகழ வைக்கும் கைக்குழல் விளக்கு.

**ஐந்தாவது படி — உருப்படி**

ஒவ்வொரு நாளும் முடிகிற போதும், மற்றவர்களுக்கு ஏதேனும் உருப்படியான உதவியாற்றிருக்கிறேனா என்று இரவு நேரத்தில் அசைபோடுகிறேன். அந்நாள் உருப்படியாய் இருந்திருந்தால் மட்டுமே என் ஆயுளில் அந்நாளை கணக்கெடுத்துக் கொள்கிறேன்.

**ஆசிரியர்**

# பணிக்குழுக்களின் சிறப்பு செயல்பாட்டு அறிக்கைகள்

## 01. கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

### மறைக்கல்வி பணிக்குழு

* 12.10.2024 – முளகுமூடு மறைவட்ட பொதுக்குழு கூட்டத்தில் 'விளையாட்டு வழி மறைக்கல்வி' என்ற சிந்தனையில் திருமதி. பிரீதா அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. 57 மறையாசிரியர்கள் பங்கேற்றனர்

* அக்டோபர் மாதத்தில் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சியில் 158 மறையாசிரியர்கள் பங்கேற்று சான்றிதழ் மற்றும் ID –யும் பெற்றுச் சென்றனர்.

* மாத்திரவிளை பங்கின் மறையாசிரியர்களுக்கு 'ஆசிரியரின் பணிகள்', 'குழு விளையாட்டுகள்' ஆகிய சிந்தனைகளில் அருள்பணி. காட்வின் சௌந்தர ராஜ், திருமதி. பிரீதா ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

### திருவழிபாடு பணிக்குழு

* 19.10.2024 – புத்தன்கடை மறைவட்ட பொதுக்குழு கூட்டத்தில் 'வழிபாட்டு குழுவின் பணிகள்' என்ற சிந்தனையில் அருள்பணி. காட்வின் சௌந்தர் ராஜ் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. 21 பேர் பங்கேற்றனர்.

* 31.10.2024 – கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு சார்பாக 'பாடல் புத்தகம்' உருவாக்கும் பணி பணிக்குழு செயலர் தந்தை ஏ. பெனிட்டோ அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

### விவிலியம் பணிக்குழு

* விவிலிய கண்காட்சி பல பங்குகளில் நடைபெற்றது. (கல்லறவிளை, வெள்ளிகோடு, பள்ளியாடி, ஈஞ்சக்கோடு)

## 02. சிறார் பணிக்குழு

* 02.10.2024 – மேல்பாலை, 11.10.2024 – மார்த்தாண்டம், காப்புக்காடு ஆகிய செயல்தளங்களில் "சவால்களை வென்றிடும் ஆளுமைமிக்க சிறார்களாக" என்ற சிந்தனையில் அருள்பணியாளர்கள் கிளாட்சன், பிரித்வி தாமஸ், ஹெபின் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 279, 276, 406 என்ற எண்ணிக்கைகளில் பங்கேற்றனர்.

* 11.10.2024 – மணலிக்கரை, 12.10.2024 – தக்கலை, திரித்துவபுரம் ஆகிய செயல்தளங்களில் மாநாடுகள் நடைபெற்றன. "இறைவேண்டலில் இறைத்திரு உளம் காணும் சிறார்கள்", "சவால்களை வென்றிடும் ஆளுமைமிக்க சிறார்களாக" என்னும் சிந்தனைகளில் அருள்பணியாளர்கள் அனில் ஜோசப், கிளாட்சன் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 414, 432, 243 என்ற எண்ணிக்கைகளில் பங்கேற்றனர்.

* 02.10.2024 – வெட்டுவெந்நி திருத்தல பங்கு, பண்டாரவிளை ஆகிய பங்குகளில் "சவால்களை வென்றிடும் ஆளுமைமிக்க சிறார்களாக" என்ற சிந்தனையில் செல்வி அஜிதா ரூபி, திருமதியாளர்கள் சுசீலா, சுதா குமாரி ஆகியோர் பயிற்சியளித்தனர். 51,41 என்ற எண்ணிக்கைகளில் பங்கேற்றனர்.

## 03. இளைஞர் பணிக்குழு

* 18.10.2024 முதல் 20.10.2024 வரை இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது. சமூக பகுப்பாய்வு, இயேசுவின் ஆளுமை, ஆன்மீகம், பாலியல் மதிப்பீட்டுக்கல்வி, விவிலிய பகுப்பாய்வு, ஊடகம் – இணையம் ஆகிய தலைப்புகளில் கருத்துரைகளும், பாடல்பயிற்சி, படைப்பாற்றல் பயிற்சி ஆகியவையும் இடம் பெற்றது. 28 பேர் பங்கேற்றனர்.

* 27.10.2024 முதல் – தான தொடர்பாளர்களுக்கு "தானம் செய்ய தயக்கம் ஏன்?" என்ற தலைப்பில் Dr. கலைவாணன், திரு.மனோஜ் ஆகியோரால் பயிற்சி வழங்கப்பட்டது. 28 பேர் பங்கேற்றனர்

### இ.கி.மா இ.மா இயக்கம்

* 11.10.2024 முதல் 13.10.2024 வரை இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் நடைபெற்றது. மனநிலை மதிப்பீடுகள், உறவும் தொடர்பும், தலைமைத்துவம், மாணவர்களும் ஊடகமும், நற்பழக்கங்கள் ஆகிய தலைப்புகளில் பயிற்சியளிக்கப்பட்டது. 41 பேர் பங்கேற்றனர்.

## 04. பெண்கள் பணிக்குழு

* காரங்காட்டிலிருந்து மங்கலக்குன்றிற்கு திருமணமாகிச் சென்ற மகளின் குடும்ப பிரச்சினையை அலசி கணவன் – மனைவி இருவரையும் இணைத்து வைக்கும் உரையாடல் நடைபெற்று வருகிறது.

* 02.10.2024 – புத்தன்கடை, 09.10.2024 – திரித்துவபுரம் ஆகிய மறைவட்டங்களில் "திருத்தி அமைக்கப்பட்ட குற்றவியல் சட்டங்கள்" என்ற சிந்தனையில் வழக்கறிஞர் சுஜா ஜாஸ்பின் அவர்கள் பயிற்சி வழங்கினார்கள்.

* பரக்குன்று இயக்கத்தில் "ஆரி ஒர்க்" என்ற தையல் பயிற்சியும், கொல்வேல் பங்கில் "கேக் செய்தல் எப்படி" என்ற சமையல் பயிற்சியும் நடைபெற்றது.

## 05. அன்பியம் பணிக்குழு

* 29.09.2024 - மாத்திரவிளை, 05.10.2024 - முளகுமூடு, 19.10.2024 - காரங்காடு ஆகிய மறைவட்டங்களின் பொதுக்குழு கூட்டங்களில் "யூபிலி ஆண்டு" "மனமகிழ் விளையாட்டு" "அன்பியத்தில் இணைந்த வாழ்வும் இறைவேண்டலும்" என்ற சிந்தனைகளில் மறைவட்ட இயக்குநர் அருட்பணி A. ப்ளாரன்ஸ், திரு.பிரான்சிஸ் கென்னடி, மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி. ஆல்வின் விஜய் ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 57 நபர்கள், 68 நபர்கள், 71 நபர்கள் என்ற எண்ணிக்கைகளில் பங்கேற்றனர்.

* 27.10.2024 - மருதங்கோடு பங்கின் அன்பிய நிர்வாகிகளுக்கு "அன்பியத்தில் இணைந்த வாழ்வும் இறைவேண்டலும்" என்ற சிந்தனையில் திரு. டேவிட்ராஜ் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. 120 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

* 26.10.2024 - மாத்திரவிளை மறைவட்ட அன்பிய இயக்குநராக அருட்பணி கலிஸ்டஸ் அவர்கள் பணிப்பொறுப்பெடுத்தார்.

* 12.10.2024 - மாத்திரவிளை மறைவட்ட அன்பிய மாநாடு "உறவுகளை தாங்கும் திருஅவையின் விழுதுகள் அன்பியம்" என்ற சிந்தனையில் நடைபெற்றது. அருட்பணி ஜாண் பெனிட்டோ அவர்களின் எழுச்சியுரை, மறைமாவட்ட குருகுல முதல்வர், மறைமாவட்ட பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர், மாத்திரவிளை மறைவட்ட முதல்வர், வேதியர் பேபிகமலா அகியோரின் வாழ்த்துரைகள் மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. 650 பேர் பங்கேற்றனர். இறுதியில் அன்பின் விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

* கல்விக்காக, முதியோர் பராமரிப்புக்காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக பங்கு, ஒருங்கிணையம் சார்பாக ரூ.2,69,170/- வழங்கப்பட்டது.

## 06.நற்செய்தி அறிவிப்பு பணிக்குழு

* 12.10.2024 - பணிக்குழுவின் நற்செய்தி பணியாளர்களுக்கு முழுநாள் பயிற்சி "நற்செய்தி பணியாளர்களின் வாழ்வும் பணியும்"என்ற சிந்தனையில் மறைமாவட்ட செயலர் தந்தை அருள்பணி. அருள் அவர்களால் வழங்கப்பட்டது. 41 நபர்கள் பங்கேற்றனர்.

## 07. தொழிலாளர் பணிக்குழு

* 13.10.2024 - சோலாபுரம் பங்கில் புதிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டு, 'நலவாரியம்' என்ற சிந்தனையில் திரு. ஜோசப் ராஜ் அவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. 15 உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

* 20.10.2024 - வெட்டுவெந்நி திருத்தல பங்கில் 'வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான நலவாரியம்' 'நலவாரிய விழிப்புணர்வு' என்ற சிந்தனைகளில் திருமதியாளர்கள் சகுந்தலா, ஜெய்னி ஆகியோரால் பயிற்சி வழங்கப்பட்டது. 54 நபர்கள் பங்கேற்றனர்.

* 27.10.2024 - காரங்காடு மறைவட்ட பொதுக்குழு கூட்டத்தில் இரு நலிவுற்ற தொழிலாளர்களுக்கு ரூ. 2,500/- வீதம் வழங்கப்பட்டது.

## 08. சமூகத்தொடர்பு பணிக்குழு

* You tube channel -ல் கண்டன்விளை பங்கின் ஐந்து நாட்களின் திருவிழா திருப்பலிகள் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

* 27.10.2024 - மறைமாவட்ட இளம் கிறிஸ்தவ மாணாக்கருக்கு 'மாணவர்களும் ஊடகமும்' என்ற சிந்தனையிலும், 27.10.2024 - மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கு "ஊடக வழி மறைக்கல்வி " என்ற சிந்தனையிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. 35,160 என்ற எண்ணிக்கைகளில் உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

* செபமாலை மாதத்தை முன்னிட்டு தினம் ஒரு செபமாலை Status Video தயாரித்து தேனருவி whats app குழுவில் பகிரப்பட்டது.

## 09. தலித் பணிக்குழு

14.09.2024 - புத்தன்கடை, 28.09.2024 - முளகுமூடு, 29.08.2024 - காரங்காடு ஆகிய மறைவட்டங்களில் பொதுக்குழு கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டத்திற்கு 7, 23, 15 என்ற எண்ணிக்கையில் பங்கேற்றனர்.

## 10. சிறை பணிக்குழு

26.10.2024 - மறைமாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் இணைந்து, மேதகு ஆயர் ஆல்பர்ட் அனஸ்தாஸ் அவர்களைச் சந்தித்து, பணியின்போது ஏற்படும் சவால்கள், தேவைகள் குறித்துப் பேசப்பட்டது.

தீபாவளி கொண்டாட்டத்தில் இனிப்புகள் வழங்குவதற்காக, குழித்துறை ஆண்கள் சிறைக்கு ரூ. 2,000- மற்றும் தக்கலை பெண்கள் சிறைக்கு ரூ. 1,000-ம் பணமாக வழங்கப்பட்டன.

# ஆயரின் அலுவல்கள்: நவம்பர் 2024

| Date | Event | Place | Time |
|---|---|---|---|
| 01 | Children Commission Conference, Thirithuvapuram Vicariate | Nanjil College, Kaliakkavilai | 10.00 am |
| | Children Commission Conference, Karencadu Vicariate | Periya Nayagi Mahal, Thiruvithancode | 03.00 pm |
| 02 | All Souls Day Mass | Thirithuvapuram | 06.00 pm |
| 03 | Contact Visit & Confirmation Mass | Mylacode | 09.00 am |
| 09 | Board Meeting | Nanjil College, Kaliakkavilai | 03.00 pm |
| 10 | Contact Visit & Feast Mass | Parakunnu | 09.30 am |
| 11 | Commissions Coordination Meeting | Unnamalaikadai | 03.00 pm |
| 13 | Mid - Year Board Meeting | St. Paul's Seminary, Trichy | |
| 15 | Flag Hoisting & Feast Mass | ChristuNagar | 06.30 pm |
| 16 | Holy Mass for Senior Citizen | Thirithuvapuram | 12.00 pm |
| 17 | Contact Visit & Confirmation Mass | Pattarivilai | 04.30 pm |
| 18 | Flag Hoisting & Feast Mass | Nalloor | 06.30 pm |
| 19 | Contact Visit & Holy Mass | Manali | 06.00 pm |
| 20 | Feast Mass | Mugamathoor | 06.30 pm |
| 22 | Annual Day Celebration | Nanjil CBSE School, Vazhuthallampallam | 05.00 pm |
| 24 | Feast mass | Christ Hall Seminary, Madurai | 11.00 am |
| 27 | Golden Jubilee Celebration | TNBCLC, Tindivanam | 10.30 am |
| 29 | Contact Visit & Feast Mass | Muttaikadu | 06.00 pm |
| 30 | Graduation Day | SXCCEngineering, Chunkankadai | 09.30 am |

Proprietor :
MAHESH

Cell :
9047162901

# BABY
## ENGINEERING WORKS



Kulesekharam Road, Unnamalaikadai.

Date of Publishing : **19-11-2024**
Puthia Thedal Registered with Register og New Papers of India
Reged No. TNTAM/2010/35944 KKI/92/**2023 - 2025** Poster on 19th & 20th of every month at Mulagumoodu Post Office

*பவள விழா வாழ்த்துக்கள்*

# ஆல்பர்ட் ஹோம்ங்ஸ்

EB. Office அருகில், பள்ளியாடி.

# ஆல்பர்ட் பர்னிச்சர் லேணட்

By Pass Road அருகில், பள்ளியாடி.

எம்மிடம் வீட்டிற்குத் தேவையான உயர்ரக கட்டில், பீரோ, ஷோஃபா செற்றி, டைனிங் டேபிள்ஸ், LED TV-கள் Refrigerator, Washing Machine மற்றும் விட்டிற்குத் தேவையான Kitchen பொருட்கள் அனைத்தும் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும். E.M.I வசதி உண்டு.

**8012714193, 7845087452**





உரிமை:

திரு. A. ஆல்பர்ட்

Edited & Published by **Rev. Fr. R. Paul Richard Joseph** on behalf of Diocese of Kuzhithurai
Bishop's House, Unnamalaikadai, Marthandam, Post Box No. 1, Pin - 629 179.
Printed at Delta Offset Printers, Vellicode